# தேனோலை

பழஞ்சுவடிக் காலாண்டிதழ்

**ஆறும் இதழ்—அக்டோபர் 75**

இந்த இதழில்

1. காளிங்கராயன் அணை கட்டியது
2. மல்லிகுந்தம் பட்டயம்
3. மெச்சும் பெருமாள் பாண்டியன்

பதிப்பாசிரியர் :

கொடுமுடி சண்முகப்பிரகதம்

26, இந்திரா நகர், சென்னை-600020

தேனோலை
பழஞ்சுவடிக் காலாண்டிதழ்
26 இந்திரா நகர்
சென்னை-600020.

| | | |
|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 4-00 |
| மூன்றாண்டுக்கட்டணம் | ரூ. | 10-00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100-00 |

அறிவியல், வரலாற்றுத் திங்களிதழான
கொங்கு இதழுக்கு
கட்டணம் அனுப்பிவிட்டீர்களா ?

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ | 3-50 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. | 10-00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100-00 |

கொங்கு பதிப்பக வெளியீடுகள் :

| | |
|---|---|
| ஆய்வுத்தேன்—வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு | ரூ. 4-00 |
| மதுக்கரைப் பட்டயம் | ரூ. 3-00 |
| பூர்வச் சக்கரவர்த்தி நாடகம் | ரூ. |

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.

பின் குறிப்பு :

வெள்ளோட்டுச் சாத்தந்தை காலிங்கராயன், வீரபாண்டியன் காலத்தவன். கி. பி. 1263 ஆம் ஆண்டு $56\frac{1}{2}$ மைல் நீளமுள்ள காலிங்கராயன் கால்வாயை பாண்டியன் துணையுடனும், தன் குடும்பச் சொத்துக்களைக் கொண்டும் 'காளிங்கராய வினியோகம்' என்று விதித்த வரியைக் கொண்டும் வெட்டினான். (இப்பட்டயம் வீரபாண்டியனையே தவறாக உக்கிர குமாரபாண்டியன் என்று கூறுகிறது) 'வெற்றிமிகுத்த வீரபாண்டிய வேந்தமைச்சன் கற்ற அறிவினன் காலிங்கராயன்' என்பது தனிப்பாடல் பகுதி. கி. பி. 13 ஆம் நூற்றுண்டின் நிகழ்ச்சியை 400 ஆண்டுகள் கழித்து கி. பி 17 ஆம் நூற்றாண்டில் செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்டு எழுதி வைத்ததாக இப்பட்டயம் தோன்றுகிறது.

பட்டயத்தைப் போற்றிப் பாதுகாத்து அளித்தவர்
வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ஆவர்.

## காளிங்கராயன் அணைகட்டியது பட்டயம்

ஸ்ரீமது, சுபநமஸ்து, ஸ்ரீமன் மகாமண்டலீஸ்வரன், பாசைக்கி, தப்புவராத கண்டன், ஆரியதழவிபாடன், ஆரிய மோகந்தவிழ்த்தான், துலுக்கர் தழவிபாடன். துலுக்கர் மோகந்தவிர்த்தான் தொட்டிய தழவி பாடன், தொட்டிய மோகந்தவிழ்த்தான், ஒட்டிய தழவிபாடன், ஒட்டிய மோகந் தவிழ்த்தான், பலனாவுக் குறைவறாத மன்னன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாத கண்டன், வினவிசை, கனவிசை, ஈழமும் ஆழமும் ஒரப்பான பட்டணமும் ரகுபதி, கெசபதி, அசுபதி, நரபதி நால்வகைப் படையோடுங் கூடி கெசவேட்டை கொண்டருளிய ராசாதி ராசன், ராசமார்த் தாண்டன், ராசகுல திலகன், ராசகெம்பீரன், நாடாளு நாயகன், ருடகுலதுங்கன், பூலோக தேவேந்திரன், ஆரணமுரையார், ஆறிலொன்று கடமைகொண்டு, ஆடுங்கடைமணி நாவசையாமல் அரசாளும், கரிகால்சோழன், மகாறாசாவய்யரவர்கள், யகமகிழ்ந்து கொடுக்கும், மக்கள் முறைமையும் தரிப்பான நன்மையும் பொருந்தியிருந்தி யிருந்தபடியினாலே பொன்னூஞ்சலும் பூந்தேரும், பூச்சக் கரக்குடையும் பெற்றருளிய கங்காகுல திலகன், காராள சிரோமணி, மேழிக் கொடியோன், மின் குவளை மாலிகை மார்பன் நாற்பத்தியெண்ணாயிரங் கோத்திரத்துக்கும் முதன்மையாயிருக்கும் கொங்கு தேசத்துக்குச் சேர்ந்த தென்கரை நாட்டு செட்டிவேணாவுடையான், நரையநாடு காசிப கோத்திரம் பிறாமணபிள்ளை பொங்கலூரு தெய்வசிகாமணி, பூந்துரை நாடு வாரணவாசி, வெள்ளோட்டுக் கனகபுரம், நஞ்சயன், ஆருநாட்டு மசக்காளி வேலணன்.

குருப்பை நாட்டு ரகுநாதணன், ஒடுவெங்கை நாடு முத்துவேலப்பன் நல்லூரந்தநாடு வாணவறாயன், வாரக்கநாடு பொங்கணன், காவுலிக்கநாடு உடையணன், எங்களைப் பத்துப் பேரையும் காங்கய நாட்டுச் சரவண காங்கயணன், பார்த்துச் சொன்ன வசனம்: கனக புரத்து நஞ்சயன் மகன் லிங்கயன் வானியாற்றில் அணைகட்ட வேணுமென்று நம்மையுந் தாவுதுரை பார்த்துவரச் சொல்லவேணுமென்று யீரோட்டுக்கு யெங்களை அழைத்துக் கொண்டுபோய் வானியில் தாவுதுரை அணைகட்டுகிறதுக்கு பார்த்தவிடத்தில்வெள்ளோட்டிலிருக்கும் *வெள்ளவேட்டுவன் பாளையக்காரன் யென்னுடைய எல்லையிலே தாவுதுரை பார்க்கிறதென்ன, அணைகட்டுகிறோ மென்று பேசுகிறதென்ன நீங்கள் அணைகட்டவேண்டாமென்று பிலத்துடனேமறித்தான்.

அதன்பிறகு நாங்கள் பத்துப்பேரும் ஈரோட்டுக்கு வந்து அதுக்குத்தக்கின சோமாசிகளை அனுப்பிவச்சு வெகு பிரதியுடனே சொல்ல கேளாதபடியினாலே இவனுடைய கெருவத்தையடக்கி அந்தத்தாவில் அணைகட்டாமல் விட்டுப் போரதில்லை யென்று பிரதிக்கினை செய்து அவையஸ்தங்குருந்து ரண்டு மூணுமாசவரைக்கும் அவனுடனே சண்டை செய்து யெங்களினாலே செயிக்கமாட்டாமல் எழைச்சுப்போயிருக்கும் வேளையிலே என்னைமங்கலம் பதியிலேயிருக்கும் காளியண்ணன், மதுரைக்குப்போய் சமஸ்தானம் ஆளப்பட்ட உக்கிர குமாரபாண்டிய ராசாசமுகத்துக்குப் போயி வெகுமதியும் கட்டக்கயரும் வெட்டவாளும் துஷ்ட சம்மாரமும் சிஷ்ட பரிபானமும் செய்துகொண்டு யிருக்கச் சொல்லி வரப்பிரசாதம் வாங்கிக்கொண்டு ஆனைமலை நாட்டு பாளையப்பட்டு செங்கோல் செலுத்திக்கொண்டிருக்கிற நாளையிலே நாங்கள் பத்துப்பேருங் கூடிக் காலிங்கராயனை ஆனைமலைக்கு அனுப்பிவிட்டு காளியணனை யீரோட்டுக்கு வரவழைத்து வெள்ளவேட்டுவன் விருத்தாந்தமெல்லாம் வழிவிபரமாய்ச் சொல்லி அவனைச் செயம் பண்ணி அந்த ஆற்றில் அணை கட்டுகிறபடிக்குச் செயிச்சுக் கொடுக்கவேணுமென்று மெத்தவும் பத்துபேருங்கூடி வெகுவிதத்திலே கேட்டுக்கொண்டதனாலே நல்லது என்று சம்மதிச்சு அந்த வெள்ளவேட்டுவன் யிருக்கும் வெள்ளோட்டுக்கு ஒ ஏருரவு கொண்டு போயி அவன் ஊடையத்தையுந் தகர்த்தி ஊரையுங் கொள்ளை பண்ணி சிறிது ராணுவங்களையும் வெட்டி அவன் தலையும் வெட்டிக்கொண்டுவந்து யெல்லோருங் காணத்தக்கதாயி வய்த்தபடியினாலே நாங்களிருவத்திநாலு நாட்டாருங்கூடிச் செட்டிவர்த்தகங்கள் பலபட்டரைச் சாதிகளையும் வரவழைத்து நம்மசனங்கள்மேற்கு

*வெள்ளைவேட்டுவன்—காலிங்கராயன் கைபீது காண்க.

நல்லூர்க்க நாடு ஆனெமலை நாடு காவிலிக்க நாடு வாரக்க நாடு ஆரு நாடு, குருப்புநாடு, ஒடுவங்க நாடு யிந்த யேழு நாட்டிலையும் சீவாரத்தனஞ் செய்யவேண்டிய—நிமுத்தியமாக பரந்துபோயிருக்குஞ் சனங்கள் அந்தந்தச் சாதிகளுக்குண்டான வரமுறைமை தாய் தகப்பனுக்கு அமுதுபடையாதவன் புருசன் பெண்சாதியை முடுக்கி விட்டவன்பெண்சாதியானவள் புருசன் வார்த்தைக்கு யேருமாறாகப் பேசினவள் ஒருத்தருக்கொருத்தர் மித்துருபேதஞ்செய்கிறபேர்கள் இப்படி நாலுவிமாயி முறைமை தப்பி நடவாமல் தரும நீதமாம் நடக்கும்படிக்கி யிருபத்திநாலு நாட்டாருங்கூடி செட்டி வர்த்தகர்களும் பலபட்டரைச் சாதிகளுக்கும் சம்மதிச்சு காளியணனுக்கு சாதிபட்டயம் நேகமுஞ் செய்துகொடுக்கவேணுமென சகலமான செனங்களும் அனைவருங்கூடி யீரோட்டுக் கோங்கிலியம்மன் சன்னதிக்குப் போயி அம்மனுக்குப் பதினாயிரம் பழம், நெய்பேதினஞ் செய்தபின்பு காளியணனுக்குச் சாதீனப் பட்டயங் குடுத்தபோது, பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து யிந்தப் பட்டயம் யெனக்குச் சேரவேணுமென்று மரித்துச் சொன்னான். நல்லதுயென்று தாராபுரம்-பிரமியணன் சொல்லும் வசனம்—உங்கள் ரெண்டு பேர் படிக்குத் திருவுளச் சிட்டெழுதி அம்மன் பாதத்திலே வய்ந்து ரெண்டுபேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்தானஞ் செய்து அம்மனைப் பிரதச்சனம் வலமாயிவந்து தெய்வசிகாமணி நான் முன்னமே யெடுப்பேனென்று சமுத்துக் கூறினான்.

சரவண காங்கேயன் சொல்லும் வசனம் நீ போயி இந்தப் பேர்ப்படிக்கி இந்தச் சிட்டு உன் கயிக்கு வந்தால் யுனக்கே நேமுகஞ் செய்து முடிக்கிமென்று சொன்னார்கள்.

அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்துவைக்கவும் அம்மன் மடியிடையில் வயிலாயிருந்து ஒரு நீர்ச் சர்ப்பம் வடவாமுகக் கினி போலுஞ் சீறிக் கோபித்து யெழுந்தது கண்டு பயந்து நடு நடுங்கி பிரண்டு கொண்டு பின்னிட்டு வந்து சோபந்தட்டி மயங்கி விழுந்தவனை காளியணன் யெடுத்து மார்போடணைத்து நெஞ்சத் தட்டி அம்மனைத் தியானிச்சுத் தண்ணீர் முகத்துக் கெரச்சு பயத்தை (தி) நிறுத்தி அவன் மனசைத் தயிரியப் படுத்திப் பண்ணினான்.

அதன்பிற்பாடு பத்துப்பேருங்கூடி காளியண்னே உன் பேர்ப் படிக்குச் சிட்டு எடுத்துவரச் சொன்னார்கள். அதன்பிறகு சுனையிலே ஸ்தானம் செய்து அம்மனை வலப்பிரதச்சினமாய் சுத்தி வந்து கோவிலுக்குள் புகவும் நாகசர்ப்பம் கோவம் மாறி மாயமாய்ப் போய்விட்டது. அதன்பிறகு அம்மன் பாதத்திலே

யிருந்த திருவுளச் சீட்டு எடுத்து வந்து பத்துப் பேருங் காணத்தக்கதாகச் சபையிலேவைத்தான். பத்துப் பேரும் சீட்டெடுத்துப் பார்த்து உன்பேருபடிக்குச் சீட்டு யிருக்குதென்று அனைவருங் கூடிச்சொன்னார்கள்.

வெண்ணை மங்கலத்திலேயிருக்குற ஆனைமலைக் காளியண்ணனுக்குச் சாதி பட்டயங்குடுத்து பாகுபச்சடமும் ரெட்டப்படிபாக்கு வெத்திலையுங் குதிரை குடை தீபட்டியும் ஒத்தைக் கொம்பும் ஒத்தத்து கும்பமும் மகப்பட்டையு கட்டக் கயரும் வெட்ட வாளும் அடிக்க ஆத்தியாக்கையும் அஷ்டாவுக்காரமும் வேண்டிய விருதுகளும் அளியாத தருமமும் சிலா சாசின பட்டயம் அமைந்தது.

இந்தப் பட்டயம் புதுப்பை செல்லப்ப வாத்தியார் வீட்டு ஏட்டுச் சுவடியிலிருந்து காகிதத்தில் பிரதி செய்யப் பெற்றது. வித்துவான் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் எழுமாத்தூர் வேலம்பாளையம் ஈரோடு வட்டம். 7—7—1974

# மல்லிகுந்தம் பட்டயம்

1. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் என்னும் சிற்றூரில், இராமகண்டன் என்பாரிடம் இப்பட்டயம் உள்ளது.

2. மல்லிகுந்தம் என்னும் ஊரில் இப்பட்டயம் இருப்பதினால் இதற்கு 'மல்லிகுந்தம் பட்டயம்' எனப் பெயர் பெறுகின்றது.

3. படிப்பதற்கும், படியெடுப்பதற்கும் அதன் உரிமையாளர், மறுத்தும், பல சோதனைகளுக்கிடையில் படியெடுத்தவர் பெருந்துறை கி. தண்டபாணி ஆவர்.

4. பட்டயத்தின் நீளம் 14 அங்குலம். அகலம் 9.7 அங்குலம். எடை 1 கிலோ 560 கிராம். வகை செப்புத்தகட்டால் ஆனது. மொத்த வரிகள் 69 முன் பக்கம் 35 பின்பக்கம் 34 மொத்த வாக்கியங்கள் 22.

5. காலம் கி. பி. 1708 மே 29, (29-5-1708) இதில் கூறப்பட்டுள்ள சாலி வாகன ஆண்டு பிழையாக உள்ளது—ஒத்து வரவில்லை. சாலி வாகன ஆண்டுக்குப் பதில், கலியுக ஆண்டாகக் கொண்டால் ஓரளவுக்குப் பொருந்தி வருகின்றது.

6. இதில் காணும் உரைநடை, ஓரளவுக்குப் படித்துப் பொருள் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால், பிழைகள் மலிந்தும், மெய்யெழுத்துக்களான ஒற்றெழுத்துக்களுக்கும், முற்றுத் தொடர் வாக்கியங்களுக்கும், புள்ளிகள் இடப்படாமலும் உள்ளது.

7. சித்திரங்கள்

முன்பக்கம் : திருவாச்சியுடன் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் உள்ள ஓர் அம்மன் (காமாட்சியம்மன்) சித்திரம் பட்டயத்தின் தலைப்பக்கத்து நடுவில் காட்சி தருகின்றது. அதற்கு வலப்பக்கத்தில், ஓர் அனுமன் வணங்கும் படியான படமும், அதன் வலப்பக்கத்தில் ஒரு வட்டமும் வரையப்பட்டுள்ளன. அம்மன் படத்திற்கு இடப்பக்கம், மண்டியிட்டபடி ஒரு கருடாழ்வார்

போன்ற ஒரு சித்திரமும், அதன் இடப்பக்கம் ஒரு வட்டமும் வரையப்பட்டுள்ளன.

அம்மன் சித்திரத்தின் கீழே. ஒரு தேர் நிற்பது போலவும், அதன்முன், தலை துண்டிக்கப்பட்ட ஒரு பெண்ணின் உடல் மண்ணில் கிடப்பதுபோலவும், அதனருகில் தலைப்பாகையுடன் ஓர் ஆண் நின்றுகொண்டிருப்பதுபோலவும், தேரில் இரண்டு சங்கிலிகள் பூட்டப்பட்டிருப்பதுபோலவும், படங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பின்பக்கம்: ஆண் கழுதை ஒன்றின்மீது மனிதன் ஒருவன் அமர்ந்து இருப்பதுபோலவும். அதன் முன்னும் பின்னும் இரண்டிரண்டு மனிதர்கள் நின்று கொண்டிருப்பதுபோலவும், ஆக ஐவர் கரங்களிலும் கேடயங்களும் போர்க்கருவிகளும், தாங்கியபடி நின்று கொண்டிருப்பது போலவும் படங்கள் வரையப்பட்டுள்ளன.

## 8. செய்திகள்.

காஞ்சீபுரத்து காமாட்சியம்மனுக்குச் சில சமூகத்தினர் ஒன்று சேர்ந்து, தேர் ஒன்றைச் செய்வித்தனர். அத்தேரை காஞ்சீபுரத்தின் நான்கு திருவீதிகளில் இழுத்துவர முற்பட்டபொழுது, சேணிய சிம்மப்புலி என்னும் மோடி வித்தைக்காரன் அதனை இழுக்கவொட்டாமல் மந்திரத்தினால் கட்டித் தடுத்து நிறுத்தி விடுகின்றான். இவன், வைணவரில் வலக்கையானவன்.

வைணவரில் இடக்கையானவரின்தேரை மந்திரத்தினால் இவன் தடுத்து நிறுத்திவிட்டதினால். அவர்கள் எப்படியும் தேரைத் திருவுலா வரச்செய்ய வேண்டும் என்ற வேட்கையினால், சிம்ம அனுமன் என்னும் வேறொரு மந்திரவாதியை வரவழைத்துத் தேரை இழுக்க உதவும்படி வேண்டுகின்றனர். அதற்கு அவன் நரபலி கொடுத்தால்தான் தேரை இழுக்க இயலும் என்று கூறித் தன்னருமை மனைவியையே நரபலியாகக் கொடுத்து தேரை நகர் வலம் வரச்செய்கின்றான். இந்த அருஞ் செயலைப் பாராட்டி அவனுக்குச் சில உரிமைகள் வழங்குகின்றனர்.

## 9. குறிப்புகள்

மல்லிகுந்தம் என்னும் ஊரில் வாழ்ந்துவரும் இராம கண்டன் என்பவர் இப்பட்டயத்தை மிகவும் பேணிப் போற்றி வருகின்றார். தலைமுறை தலைமுறையாக, இப்பட்டயம் தம் குடும்பத்தாரின் அரிய சொத்தாக இருந்து வருவதாக கூறும் அவர், அதனால் பல நன்மைகளும் அடைகின்றார். இப்பட்டயத்தால் அவரும், அவர்

தாயாதியரும் பெறும் பயன், அவ்வூரின் 15கல் சுற்றளவில் உள்ள வன்னியர், மற்றும் பட்டயத்தில் கூறப்பட்டுள்ள சில சமூகத்தினரிடம் இருந்து, ஆண்டொன்றுக்குக் குறிப்பிட்டளவு தானியங்களை, அறுவடை காலங்களில் இனாமாகப் பெறுவதுதான். இப்பரிசியல் பெறச் செல்லுங்கால், பட்டயத்தையும் உடன்கொண்டு செல்வார்களாம். அதனைக் காட்டித் தானியங்களைப் பெறுவார்களாம்.

10. இதில்கானும் சாலிவாகன ஆண்டு பிழையாகும். கலியுக ஆண்டாகக் கொள்ளுதல் வேண்டும். கலியுக ஆண்டிலிருந்து 3101 யைக் கழித்தால் கி பி. ஆண்டாகும். 4802—3101=1701 சர்வதாரி ஆண்டு 1708இல் வந்துள்ளது. ஆதலின், கலியுக ஆண்டாகக் கொண்டு, கி. பி. 1708இல் இப்பட்டயம் எழுதியதாகவும் பட்டயத்து நிகழ்ச்சிகள் நடந்ததாகவும் கொள்ளலாம். சுமார், 300 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை, அதில் காணும் வரிவடிவங்களும், 23வது வரியிலுள்ள 'கொச்சி' என்னும் ஊரின் பெயரும், 25வது வரியில் காணும் 'காகிதம்' என்னும் சொல்லும் மெய்ப்பிக்கின்றன.

65 முதல் 69 வரை உள்ள வரிகள் இடைச் சொருகலாகத் தோன்றுகின்றது. 19வது வரியில் உள்ள 'சேணிய சிம்மப்புலி, என்பவன், தேனோலை ஐந்தாம் இதழ், 28 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கும் 'சென்மப்புலவன்' ஆக இருக்கலாமோ என்னும் ஐயம் எழுகின்றது.

அனுப்புதல் :

கி. தண்டபாணி
பாத்திரக்கடை
மேச்சேரி (636453)
சேலம் Dt.

| வரிகள் | பட்டயத்தின் படி |
|---|---|
| 1 | உசோசிய விசய சாலிபவாகனம் சகாற்தி ௪௲௮௱௨ (4802) |
| 2 | ஸ்ரீ சருவதாரி ஸ்ரீ செல்லா நின்ற வைகாசி மீ˚. ௱௫. ௳ சுக்குரவாரம் (15 தேதி) அவுட்ட நக்ஷிசத்திரம் அமிர்தயோகம் சகல குணசம் |
| 3 | பன்னறன அகண்டி தனலட்சுமி பிரசன்னறான அ |
| 4 | ண்டினவறை ஆதரிக்க வல்லவறான குருபூசை சி |
| 5 | வபூசை மரவாதவறான காமாட்சியம்மன் |
| 6 | அருளுடையவரான வாடாதமாலே யுடை |
| 7 | யவறான வெத்தி மநசு சிவமநசு வன் |
| 8 | னத் தடுக்கு யுடையவறான பந்துசன |
| 9 | போசகறான வீரகண்டாமணி வீரவெண் |
| 10 | டயம் உடையவறான நகபத்து உடையவறான |
| 11 | சிங்கக்கொடி ஆளிக்கொடி ஆண்புலிக்கொடி அனு |
| 12 | மக்கெடி கெருடக்கெடி பூச்சக்கரக்கொடை அக்கினிக் |
| 13 | குதிறை வேட்டுப்பாவாடை வெண்சாமறம் உடையவறான கா |
| 14 | ஞ்சிபுரதள (ல)த்தில் பெரியசோழனார் சின்ன சோழனார் பெரிய ந |
| 15 | ல்ல பண்டாரத்தார் சின்னநல்ல பண்டாரத்தார் உடையா |
| 16 | ர் பாளையம் பிச்சிவரத்து பண்டாரத்தார் அவர்காளைச் சே |
| 17 | ந்த. ௯(9) சாதியார் சேர்ந்து காஞ்சிபுர தளத்தில் அவர்கள் சமு |
| 18 | கத்தில் காமாட்சியம்மனுக்கு ரதம் உண்டு பண்ணி நாலு வீதி |
| 19 | யும் ரதப்பிரதட்சணம் வரும்போது சேணிய சிம்மப்புலி எங்கு |
| 20 | ரவன் அந்தத்தேறை மந்திரத்தினால் அந்தத்தேரை யிழுக்க |
| 21 | வொட்டால் நிறுத்தினான் யிவன் வலக்கையா னவன் |
| 22 | யிடக்கை பாணத்தார் தேரை நிரித்தினபடியால் யிதற்கு |

முன்பக்கம்

23 கொச்சி மலையாளத் திலிருக்குர யிடக்கை சிம்ம அநும
24 ந்தனை அழைப்பித்து தேறை ஒட்டவேணு மென்று யோ
25 சித்து அவனுக்கு காயிதம் யெழுதி அனுப்பிவித்து அவனை வரவழை
26 த்து இந்த சங்கிதிகளைச் சொன்னார்கள் அவன் அதற்கு அஞ்சனம்
27 போட்டு பார்வையிட்டு சொல்லுகுறே னென்று சொன்னுன் அப்படிக்
28 கிசெய்யென்று சொன்னுர்கள் அவன் பார்வை யிட்டு. யஉ. ௲ (12000) பூதப்
29 பிசாசுகளை யேவல் செய்து தேரை நிறுத்தியிருக்குறானென்று சொ
30 ன்னான் அதற்கு யென்ன செய்குரதென்று கேட்டார்கள் அதற்கு
31 நரபொலி கொடுத்தால் தேறை யிழுக்கலா மென்று சொன்னா
32 ன். அதற்கு அவர்கள் ஆனை குதிறை ஒட்டயிதுகள் காவு குடுக்
33 குறேம் நரபொலி யெப்படி கொடுக்குரதென்று சொன்னார்கள். நீங்
34 கள் யிதற்காக ஆயாசப்படவேண்டாம் யென் பெண்சாதி ஆவல்
35 தித்தம்மாளை வெட்டி பொலி குடுத்து தேறை யிழுக்குறேனென்

பின்பக்கம்

36 சொல்லி அப்படியே பொலிகுடுத்து யஉ௲. (12000) பூதப் பிசாசுகளை
37 விடுதல் செய்து .யஉ௲. (12000) ஆனை யிழுக்குர தேரை யிருப்பு சங்கிலி
38 போட்டு தானொருவன் தன்னுடைய மூக்குனாலே நாலு வீதியு
39 ம் யிழுத்து வந்து நிலையிலே விட்டு யிடக்கை பாணத்தாருக்கு
40 சரணாகதி செய்துகொண்டான். அப்போது அவர்களுக்கு சந்
41 தோஷம் வந்து நம்முடைய தலைபோகுரத்தை நம்முடைய சாதி
42 பிள்ளை தன்னுதலையை குடுத்து திருப்பினபடியால் யிவ
43 னுக்குயென்ன குடுத்தாலும் நிலைநிற்காதெ சந்தருள் சூரியாள்
44 ஆகாஷவாணி பூமதேவி கல்லும் காவேரி புல்லும் பூண்டும்
45 உள்ள வறைக்கும் சாதனகற்பனமா செப்புபட்டயம்செய்து
46 கொடுத்தார்கள் அதுயென்னமென்றால் யிடங்கை பாணத்தார்

47 கள் வன்னிய சாதியார் தலைக்கட்டு. க-னுலை(யு)ம் முக்கு
48 ருணி (குருணி) அரிசியும் குடுக்கவேண்டியது மனோவிசுவ பிற்மா ஆசாரி
49 நகா சிந்தாமணி காவேரி கறைகண்டவர் முடக்கு மாணிக்கத்
50 தை முச்சரட்டால் கோத்தவர் காஞ்சிநகர் அயோத்தியா நகர்தெ
51 ண்ட காவேரிநகர் கெருடக்கொடி யுடைய நகரத்தார் செங்குந்திய
52 ார் மஞ்சப்பாவாடை யுடையவர் தேவேந்திரப்பள்ளன் வெள்ளைகொ
53 டை வெள்ளை வெண்சாமரமயடைவர் (உடையவர்) விருதுகோங்கி பூதக்
54 கொடியுடையவர் யிவர்களுக்கெல்லாம் தலைகட்டு. க—னுலை
55 ம் முக்குருணி அரிசியும் கொடுக்க வேண்டியது யிதுகள் குருத்துஉ
56 ளருக்கொரு (உழவுக்கொரு) ஆடும் பண்ணியும் குடுக்கவேண்டியது யிந்தப்பிர
57 காரம் யிடங்கை பாணத்தார் ஆகாசவாணி பூமதேவிசாட்
58 சியாக கொடுத்து யிருக்கிறோம் யிந்தபட்டயமும். யஅ. (18)விரு
59 தும் கொண்டுவரப்பட்ட சாதிப்பிள்ளைக்கி தடையில்லாமல்
60 குடுக்க வேண்டியது அப்படிக்கி குடாமல் யாதாமொரு
61 வர் தடை செய்தவர்கள் கெங்கைக் கறையிலே காரும்
62 பசுவை கொண்ண தோஷத்தில் போவார்கள் பிறாமண
63 ளைக் கொண்ண கோ(தோ)ஷத்தில் போவார்கள் உடையார்
64 பாளையம் பண்டாரத்தார் திருமுகம் உ

பிற்சேர்க்கை

65 பொமமலனா கான விருது கொசங்கிச் சாளிசாதி: ௰அ (18) : அ
66 வனுக்கு வரிதலைகட்டு ஒண்ணுக்கு: ௰டு பனம்: கொ
67 டுத்து:ரு: நெள்ளு வள்ளம் தடையிள்ளமள் குடுகிறது
68 படாய் கலியாணத்துக்கு ... சாவுக்கு...ரு...மாடு...க குடுக்கவும்
69 ச்சி உரு அரிவள்ளம்
குடுக்கவும்.

மயிலேறி பாடிய

# மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை

(வில்லுப்பாடல்)

தொகுப்பாளர் & பகுப்பாளர்:

சு. சண்முகசுந்தரம் எம் ஏ.,

ஆய்வாளர் தமிழ்த்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர் :

கொடுமுடி சண்முகப்பிரகதம்

26, இந்திரா நகர்,

சென்னை-600020

# கதையைப் படிக்குமுன்

இக்கதையைப் பாடி வருபவர் திரு மயிலேறி என்பர் திருநெல்வேலியில் பொருநைக் கரையில் ஒரு குடிலில் வாழ்கிருர்.

இக் கதையின் நாயகன் மெச்சும் பெருமாள் பாண்டியன். இவரைத் தெய்வமாக்கி பூஜித்துவருகிறார்கள். ஒரு குடும்பத் தின் சொந்த தேவதையாக விளங்குகிறார். இவரை ஊரிலுள்ள அனைவருமே வணங்கி வருகின்றனர். இக்கோயிலில் மண்ட பங்கள் ஏதுமில்லை. கல்லால் அமைந்த சிறு பீடமே உள்ளது. இவருக்குப் போக்காள சாமி என்றும் பெயருண்டு.

இக்கதையை நான் பெறுமாறு மிகப் பெரும் உதவி செய் தவர் என் மைத்துணர் பெருமாள் பாண்டியன். அவரைப் பெற்றது என் பெரும்பேறு. இக் கதை நடந்த ஊரும், இன்று தெய்வமாக இருக்கும் ஊரும், இவர் இருக்கும் ஊரும் ஒரே ஊர்தான். அதுதான் திருநெல்வேலியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டருக்குள் இருக்கும் கோபால சமுத்திரம். இதற்கு ராச கோபால சமுத்திரம் என்றும் பெயருண்டு.

இக் கதையில், ஓர் ஊர் காவலனுக்கும் கள்ளர்களுக்கும் போராட்டம் நடக்கிறது. ஊரையும் நாட்டையும் இந்த வீரனின் இளம் ரத்தம் காக்கத் துடிக்கிறது. ஆனால் வண்ணாத்தியிடம் கொண்ட கள்ளத் தொடர்புதான் நம்மை முகம் சுழிக்க வைக் கிறது. என்றாலும் காதலும் (அடுத்தவன் மனைவி என்றாலும் அக்காலத்தில் காதல்தானோ என்னவோ?) வீரமும் ஒரு தமிழ் வீரனுக்கு இருப்பது சகஜம்தானே. நன்றி மிக்க நாய்கள் நன்றாக தங்கள் கடன்களைத் தீர்க்கின்றன.

இக் கதையைப் பாடலாகக் கோவில் விழா நாட்களில் கேட்கும்போது, இவ்வூர் மக்கள் ஆனந்தப்பரவசம் கொள் கிறார்கள்.

இக் கதையின் ஏட்டை எனக்குத் தரும்போது மயிலேறி சொன்னார், "ஐயா! என்னிடம் நிறைய ஏடுகள் உள்ளன. இனி என்னல் காக்க முடியாது. தேவையானதை எடுத்துச் செல்லுங் கள். நாலுபேருக்குத் தெரியட்டும்" என்ருர் ஆற்றுநீர் கால்களை நனைக்கும்போது, அவர் இவ்வாறு சொன்னதும் என் நெஞ்சுக்கு ஏறிவிட்டது.

**சு. சண்முகசுந்தரம்**

# மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை

## நாட்டுவளம்

நாட்டிலேயும் நல்லநாடு
நாவலர்கள் புகழும் நாடு
சிறுகதலி பழுக்கும் நாடு
செந்நெல் கன்னல் விளையும் நாடு
கதலி பழுக்கும் நாடு
தேங்காய் அமிர்தம் சோலை சூழும்
தென்னாடு தேசத்திலே,

## ரிசியின் ஆசை

அட்டநீச[1] எட்டுபேர்கள்
ஆண்டிருக்கும் வேளையிலே,
அதிலேயொரு ரிசியவர்தான்
அழகு சுவேத ரிசியவர்தான்,
'கடவுளைத்தான் பார்க்க வேணும்
கனத்தவரம் வாங்க வேணும்
மாங்காய் அமிர்தம் சோலை சூழும்
மாணிக்க வட கயிலையிலே
பரமசிவமும் பார்வதியும்
பாத்துவரம் வாங்கவேணும்;

## கைலையும் காட்சியும்

கயிலைக்குத்தான் வழி நடந்தார்
கட்டுடனே ரிசியவர்தான்.
மாணிக்க சைலாசத்தில்
மகாதேவர் முன்னே வந்தார்.
சுவேத மகா ரிசியும்
சொன்னார் சிவனாரிடம்
' ரிசிகளிலே பெரிய ரிசியாக
சிவனாரே நான் இருக்க வேணும்''
என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வார் சிவனாரும்.

## சிவன் சொன்ன பதில்

''தவமது தான் செய்தீரானால்
தானே பெரியவனாய் இருக்கலாமே.
தென்னாடு தேசத்திலே
சிறந்த பாண்டிய நாடதிலே
பாண்டிய நல்ல நாடதிலே
படர்ந்த தாம்பர வர்ணியிலே[2]
தாம்பரவர்ணி அருகினிலே
தானே ஒரு வனமிருக்கே.
அந்த நல்ல வனமதுதான்
அருந்தவசுக்கு ஏற்றவனம்.
அதிலே ஆயிர வருட காலம்
அருந்தவசு செய்ய வேணும்.''
என்று சொன்னார் சிவனாரும்

## ரிசியின் வேண்டுகோள்

ஏது சொல்வார் ரிசியவரும்,
''தவசு செய்ய வேண்டுமானால்
தலைமகன் வெள்ளைக் கணபதிய,[3]
தலைமகனைத் தந்தீரானால்
தவசுசெய்ய போவேனென்றார்.''

## கைலையை விட்டுப் புறப்படல்

தலைமகனை அனுப்பிவைத்தார்
சாப்பசிவ மூர்த்தி தானே.
கணபதியும் ரிசியவரும்
கயிலையை விட்டு வந்தார்கள்.

## தாம்பரவர்ணி கரையில் தங்கல்

தாம்பரவர்ணி யருகே
தானே மூங்கில் வனமதிலே,
வெள்ளை அரச மரத்தடியில்[4]
வீற்றிருந்தார் கணபதியும்.
வெள்ளை வினாயகர் என்றல்லவோ
வேந்தன்ரிசி[5] பேர் கொடுத்தார்.
ஆசிரமத்தைக் கட்டினாரே
அர்ச்சனைகள் செய்து வாரார்.

---

1. அட்டநீச — எட்டுவகை இழிவுகள்
2. தாம்பரவர்ணி — பொருநை
3. வினாயகரே வினைக்கு முதல்வன். எனவே அவனையும் அழைத்தார்
4. வினாயகரின் இருப்பிடம் வெள்ளை அரசமரத்தடிதான்.
5. வேந்தன் ரிசி — ரிசிகளின் தலைவன்.

### சுவேதமகாரிசி வனம்

அந்த நல்ல வனமதற்கு
அப்போதே பேர்கொடுத்தார்.
சுவேத மகாரிசி வனமென்று
சொல்லலுற்றார் ரிசியவரும்.
அன்றுமுதல் வனமதுதான்
அதிசயமாய் ஆகுதய்யா.
பூக்காத மரங்களெல்லாம்
பூத்துச் சொரியுதங்கே.
காயா மரங்களெல்லாம்
காய்த்துக் கனிச் சொரியுதங்கே.

### ரிசியின் வழிபாடு

சுவேத மகா ரிசியவர்தான்
தீர்த்தமாட வாராரே.
தாம்பரவர்ணி நதியதிலே
தானே மூங்கிலடி தீர்த்தமதில்
தானம்பண்ணி நேமம் செய்தார்.
தர்ப்பணபூசை தான் முடித்தார்.
சுவேத மகா ரிசியவர்தான்
சுற்றி வந்தார் வினாயகரை.

### வினாயகரின் விளக்கம்

நமஷ்கரித்த நேரத்திலே
நல்ல வெள்ளைக் கணபதியும்,
"வடநாடு தேசத்திலே
வாழ்மதுரை தனிலிருந்து,
பாண்டியமார் இருபேர்கள்
பவனி சுத்தி[1] பாத்து வாரார்.
அவர்களாலே நம் நாட்டுக்கு
அனேகம் பேர் வரப் போறார்."
"ஆகட்டும்", என்று சொல்லி
அடிபணிந்தார் ரிசியவர்தான்.

### பாண்டிய மன்னர்களின் வருகை

வீரக் கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
அண்ணன் தம்பி இருபேரும்
அசுவத்தில்[2] ஏறலுற்றார்.
பாண்டியமார் இருபேரும்
பணமுடிப்பைத் தோளிலிட்டு
நாடு சுற்றி பார்ப்பதற்கு
நலமுடனே வாரார்கள்.
காடுசெடி வனம் தாண்டி
களைத்து வந்தார் தென்னாடு.

### ரிசியும் மன்னர்களும் சந்தித்தல்

தாம்பரவர்ணி கரையதிலே
தானம் பண்ணி பூசை செய்தார்.
பாண்டியமார் பூசைபண்ண
படுத்திருக்கும் அசுவம் ரெண்டும்.
சுவேதமகா ரிசியவர்தான்
வெள்ளை வினாயகருக்குப் பூசை செய்தார்.

மணி சத்தம் காதில் கேட்டார்
மதுரை நல்ல ராசாக்கள்.
மூங்கில் வனமதிலே
முழங்குதய்யா மணியோசை.
மணியோசை கேட்டவுடன்,
மன்னர் ராசா இருபேரும்
ஓட்டமும் நடையுமாக
ஓடி வந்தார் இருபேரும்.
சுவேதமகாரிசி ஆசிரமத்தை
சுற்றிபார்த்தார் இருபேரும்.
வெள்ளை மரத்தடியில்
வினாயகரை நமஸ்கரித்தார்.

### ரிசியின் கூற்று

சுவேத மகா ரிசியவர்தான்
சொல்லுகின்றார் வாய் திறந்து,
"வாரும் பிள்ளாய்[3] ராசமன்னா!
வார்த்தையொன்று சொல்லக் கேளாய்!
ராச்சியமாக அமைக்க வேண்டும்
இந்த நல்ல வனமதைதான்.
ராசமுடி தரிக்கவேண்டும்.
ராசபட்டம் கட்டி வைப்போம்".
என்று சொன்னார் ரிசியவரும்.

### மன்னர்கள் மதுரை செல்லல்

ஏது சொல்வார் ராசாக்கள்,
அப்படியே நல்லதென்று
அண்ணன் தம்பி இருபேரும்
அசுவத்தின் மேலேறி,
அழகு மதுரைக்கு வந்தார்கள்.

---

1. மன்னர்கள் நாட்டைச் சுற்றிபார்த்து வருவது பவனியாகும்.
2. அசுவம் — குதிரை.
3. பிள்ளாய் என்பது மரியாதையைக் குறிக்கும்.

மதுரைப் பட்டனம் நாடதிலே
மன்னர் பாண்டியர்கள் வந்தார்.

## மதுரையைவிட்டுப் புறப்படல்

ஆனைபரி சேனைகளும்
அதற்கேற்ற காலாளும்
ராமா லட்சுமணா
களஞ்சியத்தை[1]
நலமாகத் தான் துறந்து
களஞ்சியத்து பணத்தை
யெல்லாம்
கட்டிவைத்தார்யானையின் மேல்
ஆனையின் மேல் அம்பாரி
அருமையுடன் வைத்தார்கள்.
காலாளும் சேனைகளும்
கடுகெனவே பயணம் வைத்தார்.
சொக்கலிங்க நாதரையும்
மீனாட்சி அம்பிகையையும்
தரிசனங்கள் செய்தல்லவோ
செல்வமாக வாரார்கள்.
தென்னாடு தேசத்துக்கு
சீராக வாரார்கள்.

## வனத்திற்கு வந்தடைதல்

தாம்பரவர்ணி தான்கடந்து
தானே வந்தார் ரிசியருகே.
சுவேத மகாரிசி வனமதிலே
கூடாரம் போட லுற்றார்.
அழகழகா மேடை வைத்தார்
அரண்மனைகள் கட்டலுற்றார்.

## அரண்மனை அமைத்தல்

சுத்துகட்டு மாளிகையாம்
சூழ நல்ல அங்கணமாம்[2]
கோட்டைகளும் கொத்தளமும்
கோபுரமும் துறவுகளும்
ஆசார வாசல்களும்
அதிகார மேடைகளும்
ஆனைக்கட்டும் சாவடியாம்
அசுவம் கட்டும் கொட்டகையாம்
குதிரை கட்டும் சாவடியாம்
கொட்டார வாசல்களாம்
துர்க்க என்னும் காளி கோயில்[3]
துரிதமாகக் கட்டி வைத்தார்.

## ஆட்களை அழைத்தல்

ஆளடிமை வேணுமென்று
அண்ணன் தம்பி இருபேரும்
'நாம்நாடு செல்ல வேண்டும்
நலமான குடும்பக்கமாற்[4]
நாற்பது வீட்டுக்காரர்
நலமுடனே கொண்டு வந்து
குடியேத்தி வைக்க வேண்டும்
குணமுடனே வாழவேண்டும்',
அண்ணன் தம்பி இருபேரும்
அந்தநாடு வந்து சேர்ந்தார்.
நாற்பது வீட்டு பள்ளர்களை
நலமுடனே கூட்டி வந்தார்.

## நாட்டினை நிறுவல்

வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
சுவேத மகாசிரியை வந்து
துரிதமுடன் வணங்கலுற்றார்.
சக்கர நகரமென்று
சரியாகப் பேர் கொடுத்தார்.
சக்கர நகரத்தில் வந்தல்லவோ
சந்தோசமாக குடும்பக்கமார்
பாண்டிய ராசாவை
நமஸ்கரித்தார்.
பணத்தை அள்ளி தான்
கொடுத்தார்.

## கோவில் கட்டல்

நாற்பது வீட்டு குடும்பக்கமார்
நலமுடனே ஒன்று கூடி'
சிவன கோவில் கட்டியல்லோ
சிறப்பாகத் தான் முடித்தார்.
காளி கோவில் கட்டினார்கள்

---

1. களஞ்சியத்திற்கு இராமனின் பெயரையும் இலக்குவன் பெயரையும் வைத்திருந்தனர்.
2. அங்கணம் — கழிவுநீர் செல்லும் இடம்.
3. கோட்டையின் காவல் தெய்வம் காளி என்பது மக்கள் நம்பிக்கை.
4. குடும்பக்கமார் — பள்ளர் சாதியினர்.

கட்டுடனே குடும்பக்க மார்கள்.
முப்பிடாதி அம்மாள் என்று
மூன்று தரம்[1] அழைத்தார்கள்.

## இருசால் பணம் பிரித்தல்

இப்படியாகத் தானே
இருந்து வரும் நாளையிலே —
பார்த்தாரே பாண்டியரும்
பகுதி பணம் பிரிப்பதற்கு,
இருசால் பணம் பிரிப்பதற்கு
இன்பமுடன் அழைத்தார்கள்.
அரண்மனைக்குக் காவலய்யா
அழகுப் பொன்பெருமாள் தேவர்.
அவரை மெள்ள அழைத்தல்லவே
அன்புடனே ஏது சொல்வார் —

## தலையாரியை நியமித்தல்

"இன்றுமுதல் தலையாரியாக
இருக்கவேண்டும்'', என்று
சொன்னார்.
ஆயிரம் பொன் கொடுத்து
அரண்மனைதான் கட்டச்
சொன்னார்.
நாலுகட்டு மாளிகையாம்
நடுவறையில் அங்கணமாம்.
சுத்துகட்டு மாளிகையாம்
சூழவொரு அங்கணமாம்.
வளமாக இப்படித்தான்
வாழ்ந்து வாரார் பொன்
பெருமாள்.

## வளமான வாழ்வு

பணத்திலும் பெரியவர்தான்.
சனத்திலும் பெரியவர் தான்.
பாலாலே குறைவுமில்லை.
பாக்கியத்தால் தாழ்வுமில்லை.
பொன்பெருமாள் தேவர்க்கும்
சங்கர வடிவு அம்மாளுக்கும்
மன்மதனும் ரதியும் போல்
மவுசாக[2] வாழ்ந்தார்கள்.
வாழ்ந்து வரும் நாளையிலே—

## குழந்தையில்லா குறை

வாய்த்த சங்கர வடிவு அம்மாள்
"என் கணவா மன்னவரே!
எனக்கு வாய்த்த பிராணநாதா!
பொன்னிருந்து என்ன செய்ய
புத்திரனும் இல்லாமல்.
பணமிருந்து என்ன செய்ய
பாலகனும் இல்லாமல்.
மலடி மலடி யென்று
மண்ணிலுள்ளோர் ஏசலாச்சே.
இருசி[3] இருசியென்று
எல்லோரும் சொல்லலாச்சே.
காசுக்குப் பிள்ளை வாங்கி
கடைத்தெருவில் விட்டோ
மானால்
கடைதான் நிறைந்திடுமோ
கண்டசனம் ஒப்பிடுமோ.
பணத்துக்குப் பிள்ளை வாங்கி
பந்தலிலே விட்டோமானால்
பந்தல் நிறைந்திடுமோ
பார்த்த சனம் ஒப்பிடுமோ?
என் கணவா பொன் கணவா!
என்னுடைய பத்தாவே!
ஆண்மலடோ பெண்
மலடோ
ஆராய்ந்து பார்க்கணுமே'',
முத்துப் போல கண்ணீரை
முகம் வடிய சோர விட்டாள்.
பவளம் போல கண்ணீரை
பக்கமெல்லாம் சோர விட்டாள்.

## ஆறுதல் அளித்தல்

கணவனுமே அந்நேரம்
கண்ணீரை தான் துடைத்தார்.
"அஞ்சாதே மலையாதே
ஆதிசிவன் தானிருக்கான்''.
அந்நேரம் சோதிடரை
அருமையுடன் அழைத்து வந்தார்.

## சோசியன் சொன்னது

சாந்தாலே தரை மெழுகி
சந்தணத்தால் கோலமிட்டார்[4]

---

1. மூன்றுதரம் என்பது மக்களின் நம்பிக்கை வழக்கு.
2. மவுசு — சீராக, சிறப்பாக.
3. இருசி — மலடி,
4. சந்தணக் கோலம் — மங்கலக்குறி.

கோலமிட்ட வாசலிலே
குலவாழை தூண் நிறுத்தி'[1]
வித்தை வினாயகனை
விரைவாக முன்னே வைத்தார்.
பொன்னாலே விளக்கேற்றி
பூமலர்கள் தான் சாத்தி
நிறைநாழி நிறை மரக்கால்[2]
நேசமுடன் தான் படைத்தார்.
சோவிநல்ல தான் பரத்தி[3]
சொல்லலுற்றார் அந்நேரம்.
வண்ணமுள்ள சோசியனும்
வாய் துறந்து ஏது சொல்வார்.
‘‘பிள்ளையது வேண்டுமானால்
பெருந்தவசு செய்ய வேண்டும்.
குழந்தையது வேண்டுமானால்
கோவிலுக்கு மாதாந்தம்.[4]
மைந்தனுமே வேண்டுமானால்
மாதாந்தம் நடக்க வேண்டும்
சங்கரன் கோவிலுக்குச்
சந்தோசமாக நடக்க வேண்டும்.
இருபத்தொரு மாதாந்தம்
இன்பமுடன் நடக்க வேண்டும்.
மாதாந்தம் நடந்தீரானால்
மைந்தனுமே உமக்குண்டு.
ஆணுக்கு ஆணுமுண்டு
அடுக்களைக்குப் பெண்ணுமுண்டு,
என்று சொல்லி சோதிடரும்
ஏகலுற்றார் அந்நேரம்.

## பிள்ளைக்காகப் பெருந்தவசு

சங்கரன் கோவிலுக்குத்
தானே நடக்கலுற்றார்.
நேர்ந்து தவமிருந்தார்.
நெய்விளக் கெரித்தார்.
மண்குமித்த இடங்களெல்லாம்
பொன்குமித்து தவசிருந்தார்:
தூரவழி போவோர்க்குச்
சுமைதாங்கி[5] கட்டிவைத்தார்.
காதவழி போவார்க்கு
கல்கிணறு கட்டி வைத்தார்.
கல்கிணறு கட்டியல்லோ.
கைத்துலாவும் போட்டு வைத்தார்

## தானமும் தவமும்

கூனற் குருடருக்கும்
குறைக்கால் முடவருக்கும்
ஆண்டி பரதேசியர்க்கும்
அன்னமடம் கட்டிவைத்தார்.
இலையிலே சாதமுண்டால்
என்னதவம் என்று சொல்லி
தரையை நல்ல தாமொழுகி
சாதமுண்டார் இருபேரும்.
இந்தப்படி மாதாந்தம்
ஏகமுடன் நடக்கலுற்றார்.
இருபத்தொரு மாதாந்தம்
இன்பமுடன் நடக்கலுற்றார்.
மாதாந்தம் உயர்த்தி விட்டார்[6]
மன்னவரும் தேவியரும்.

## கேட்டது கிடைத்தது

அந்தமாசம் விலக்கமது
அவளுக்கும் வந்ததங்கே.
நன்றியுடன் குளிமறந்தாள்,
நாற்பது நாள் கர்ப்பமானாள்.
ஊரறிய ஒரு மாசம்
நாடறிய நாற்பது நாள்.

---

1. குலவாழை — குலையோடு உள்ளவாழை. மங்கலக்குறி.
2. நிறைநாழி நிறை மரக்கால் — நிறைவின் அறிகுறி.
3. சோவி பரத்துவது — கழங்கு பார்த்தல் போன்றது.
4. மாதாந்தம்—ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமை யிலும், முருகன் கோவிலுக்குச் செல்லுதல். தொடர்ந்து இருபத்தொரு தடவை செல்லவேண்டும் என்பது மக்கள் நம்பிக்கை
5. சுமைதாங்கி — கர்ப்பமுற்ற பெண்கள் இறந்து போனால் அவர்கள் நினைவாகவும் அமைப்பது உண்டு.
6. உயர்த்திவிட்டார் — முடித்து விட்டார்.

### கருவளர்ந்த போது

மாதமிரண்டு ஆனபோது
மங்கையரும் ஏதுசொல்வார்?
மூன்றாவது மாசத்திலே
முகம் வெளுத்து மேனியானாள்.
நாலாவது மாசத்திலே
நளினமான மயக்கமுண்டாம்.
அஞ்சாவது மாசத்திலே
அங்கமெல்லாம் தங்க நிறம்.
ஆறாவது மாசத்திலே
அடிவயிறு பூரணமாம்.
ஏழாவது மாசத்திலே
எழுந்திறியா கிடையானாள்.
கஞ்சிகுடி மறந்தாள்
கண்ட பண்டம் தின்கலுற்றாள்.
மாங்காயும் பலாக்காயும்
மலப்புளியங் காயுடனே[1]
தேங்காயும் நெல்லிக்காயும்
தின்றாளே மங்கையரும்.
எட்டாவது மாத்தையிலே
சுட்டமண்ணை புட்டுத்
தின்னாள்.
ஒன்பதாம் மாத்தையிலே
ஊரறிய பொங்கலுற்றார்.

### மருத்துவச்சி வருகை

இன்பமுடன் நாள் கேட்டு
ஈத்துபுரைதான்[2] முடித்தார்.
வருத்தம் வர கண்டிருந்து
மருத்துவத்தைக் கூட்டி வந்தார்.
மருத்துவத்தைக் கண்டபோது
மங்கையரும் ஏது சொல்வார்.

### சங்கரவடிவின் சந்தேகம்

"சரிந்த புகழ் மருத்துவமே
சாகாமல் பிழைப்பேனோ?
அனியாய பாடாச்சே
அறியாமல் தவசிருந்தேன்.
மணவாளர் எனக்கு வேணும்
மக்களினி வேண்டாமே.
கணவனே எனக்கு வேணும்
கைக்குழந்தை வேண்டாமே
கருவாய் ஜனிக்கையிலே[3]
கருமருந்தைத்[4] தின்றேனில்லை.
உருவாய் ஜனிக்கையிலே
உள்மருந்தைத்[5] தின்றேனில்லை.
பிள்ளையின் ஆசையின்பம்
போறாதோ இனிமேலும்."

### வலியின் வருத்தங்கள்

சந்து வலிக்குதென்பாள்
சரீரமெல்லாம் நோகுதென்பாள்.
வயிறது நோகுதென்பாள்
வண்டதுபோல் உருளுது
என்பாள்.
மயங்குகிறாள் தியங்குகிறாள்
மங்கை சங்கர வடிவம்மாள்.
தன்னுடைய கணவனைத்தான்
தானே மெல்ல அழைத்தாளே.

### கணவனுக்குச் சொன்னது

"என் கணவா பிராண நாதா
என்னுடைய மணவாளா!—நான்
மாண்டு மடிந்தக் கால்
மனது கலங்காதிங்கோ.
செத்து மடிந்தேன் ஆனால்
சிந்தை கலங்காதிங்கோ.
நம்ம குல தேவதைக்குக்
கொடை கொடுக்க[6]
நேர்ந்திடுங்கோ.
மாண்டு மடிந்தவர்க்கு
மாலைவைக்க நேர்ந்திருங்கோ.

---

1. புளியங்காய், நெல்லிக்காய் போன்றவை புளிப்புச் சுவையன. இவை கர்ப்பினிகளால் பெரிதும் விரும்பப் படுவன.
2. குழந்தை பெறும் தாய்க்காகக் கட்டப்படும் ஓலையால் அமைந்த சிறுகுடில்.
3. ஜனித்தல் — உருவாதல்.
4, 5. கருவை அளிக்கக் கூடிய மருந்துகள்.
6. தெய்வத்துக்குக் கிராமங்களில் அளிக்கும் விழாவே கொடை. ஒரு நாளேனும் மூன்று நாளேனும் நடை பெறுவதுண்டு.

சாவேனோ பிழைப்பேனோ
சரிந்த புகழ் மருத்துவமே,
என் தலை விதிதான்
எப்படியோ
ஈசன் பகவானே''
கடவுளைத்தான் அன்னேரம்
கையெடுத்துத் தெண்டனிட்
டாள்.
முத்துப்போல் கண்ணீரை
முகம் வடிய சோர விட்டாள்.
பவளம் போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோர விட்டாள்.

## மருத்துவச்சியின் உதவி

அன்னேரம்[1] மருத்துவமும்
அருமையுடன் ஏது சொல்வாள்.
முக்காலி கொண்டு வந்து
முன்னாலே தான் போட்டாள்
ஈத்துக் கயிறு[2] கொண்டு வந்து
எதிரிலே தான் போட்டாள்.
முக்காலி மேலிருந்து
ஈத்துக் கயிறு தான் பிடித்தாள்.

## பெண் பிறந்தபோது

பெருமையுடன் வயிருமிட்டு
பெண் குழந்தை பிறந்திடுமாம்.
கொப்புளறுத்து குலவையிட்டாள்
குளிப்பாட்டி சேனை போட்டி
தங்க நல்ல தொட்டிலிலே
தாலாட்டி ஓராட்டி[3]
ஓரிரண்டு வயதினிலே
ஊர்ந்து விளையாட
பிறந்த நல்ல குழந்தைக்குத்தான்
பேரிடவே வேணுமென்று
சோதிடரைத் தானழைத்தார்.

## பெண்ணுக்குப் பெயரிடல்

சொல்லுகிறார் சோதிடரும்
பிள்ளை பிறந்த லக்கணத்தைப்[4]
பெருமையுடன் பார்க்கலுற்றார்.
வைகாசி மாத்தையிலே
வக்கிர உச்சத்திலே
ராட்சச வேளையிலே
நலமுடனே பிறந்திருக்கே.
வக்கறனும் ராச்சதனும்
வகையுடனே சேர்ந்ததினால்.
வளத்தராக்கி என்று சொல்ல[5]
வகையுடனே பேர் கொடுத்தார்.

## பிறந்தவேளை பொல்லாதது

''பிள்ளை பிறந்த நேரம்
பூமிக்கே ஆகாதே.
மகளாய் பிறந்த நேரம்
மாநிலத்துக்கு ஆகாதே.
தலைமகள் பிறந்த நேரம்
தகப்பனுக்கு ஆகாதே.
அருமை மகள் பிறந்த நேரம்
அப்பாவுக்கு ஆகாதே.
சொந்தமகள் பிறந்த நேரம்
சோத்தை[6] எல்லாம் தொலைத்
திடுவாள்.
ஆசைமகள் பிறந்த நேரம்
அரண்மனைக்கு ஆகாதே.
ஆனைகட்டும் சாவடிகள்
அய்யா வீட்டில் இருந்தால்,
பூனை போல் தானிருந்து
புலம்புமே மகள் கிரகம்.
குதிரைகட்டும் சாவடியில்
கூகை இருந்து கூவுமய்யா.
அரண்மனை வாசலிலே
ஆந்தை இருந்து தான் அலறும்.
வளத்தராக்கி என்றவர்க்கு
வயது ஏழு வந்த பின்னே,
ஏழு நல்ல வயதிலே தான்
இந்த ஊரை விட்டுப்
போகனுமே'',
இப்படியாய் சோதிடரும்
ஏகமுடன் சொல்லலுற்றார்.

---

1. அன்னேரம்—அந்த நேரம்.
2. ஈத்துக் கயிறு—குழந்தை பெறும்போது தாய் பற்றிக் கொள்ளும் கயிறு.
3. ஓராட்டி—தாலாட்டி.
4. லக்கணம்—நட்சத்திரம்.
5. பிறந்த நட்சத்திரத்தாலும் பெயரிடுவது வழக்கம். (வளத்தராக்கி).
6. சோத்தை—சோற்றை.

## மனைவியின் மனதைத் தேற்றுதல்

சோதிடரை அனுப்பி விட்டு
சொல்லுகிறார் பாண்டியரும்,
"அன்று எழுதினவன்
அழித்தெழுத போவதில்லை.
பின்னே எழுதினவன்
பேர்த்தெழுத[1] போறதில்லை.
ஏட்டில் எழுதினதை
எடுத்தெறியப் போறதில்லை.
தலையில் எழுதினது
தப்பாதே ஒரு நாளும்".
"பாண்டியர் மனந்தேறி
பத்தினியைத் தான் பார்த்து
'சோதிடர் சொன்னதெல்லாம்
சுத்தமென்று[2] எண்ணாதடி.
புத்தி கெட்ட சோதிடர்தான்
புலம்புவதை நம்பாதடி''

## சங்கர வடிவின் சந்தோசம்

சங்கர வடிவம்மாள்
சந்தோசமா மனந்தேறி
பிள்ளையுட ஆசையாலே,
பெருமையுடன் வளர்த்து வாராள்.
மூன்று நல்ல வயதினிலே
மொட்டையிட்டு காதுகுத்தி[3]
வளர்த்து வரும் நாளையிலே

## இரண்டாவது கர்ப்பத்தில்

வடிவு நல்ல அம்மாளும்,
ஈசன் கிருபையினால்
இரண்டாவது கர்ப்பமானாள்
நன்றியுடன் குளிமறந்தாள்
நாற்பது நாள் சென்றாளே.
அஞ்சாறு மாசத்திலே
அரை வயிறு பூரணமாம்.
பத்தாவது மாசத்திலே
பாலகி[4] பிறந்தாளே.

## பேரிட்டு சீராட்டல்

கொப்புள்தான் அறுத்து
குளுப்பாட்டி சேனைபோட்டி
துய்யமுலைப் பால் ஊட்டி
தொட்டிலிலே போட்டாட்டி
இன்பமுடன் குழந்தைக்குத் தான்
என்னபேர் விட்டார்கள்.
சங்கரன் அருளினாலே
சடையுடன் பிறந்ததாலே
சடைச்சி என்று பேருமிட்டாள்[5]

## வளர்ந்துவரும் நாளையிலே

வயது ரெண்டாச்சி
வாய்த்ததொரு பெண்கொடிக்கு
மூன்று நல்ல வயதினிலே
மொட்டையிட்டு காதுகுத்தி
வளத்து வரும் நாளையிலே
வாய்த்த சங்கர வடிவம்மாள்.

## மூன்றாவது கர்ப்பம்

மூன்றாவது கர்ப்பமானாள்
முக்கண்ணன் கிருபையினால்.
ஊரறிய ஒரு மாசம்
நாடறிய நாற்பது நாள்.
மாதம் மூன்றாச்சி
மங்கை சங்கர வடிவுக்கு.
நான்காவது மாசத்திலே
நளின ஒரு மயக்கமாச்சே.
அஞ்சாவது மாசத்திலே
அங்கமெல்லாம் தங்க நிறம்.
ஆறாவது மாசத்திலே
அடிவயிறு பூரணமாம்.
கஞ்சிக்குடி தான்மறந்தாள்
கண்டபண்டம் திங்கலுற்றாள்.

---

1. பேர்த்தெழுத—பெயர்த்தெழுத.
2. சுத்தமென்று—உண்மையென்று.
3. மூன்று வயதானதும் குழந்தைகளுக்கு மொட்டையிட்டுக் காது குத்துவது வழக்கம். இது பெரும்பாலும் கோவிலில் நடைபெறும்.
4. பாலகி—பெண் குழந்தை.
5. உருவ அமைப்பாலும் பெயரிடுவது வழக்கம் (சடைச்சி)

ஏழாவது மாசத்திலே,
எழுந்திரிக்கக் கூடுதில்லை.
எட்டாவது மாத்தையிலே
கட்டை மண்ணைப் பிட்டுத்
தின்றாள்.
ஒன்பது பத்து ஆனபோது
ஊரறிய பொங்கலுற்றார்.

### பிரசவ வேதனை பெரிது

வருத்தம் வரக் கண்டிருந்தும்
மருத்துவத்தைக் கூட்டி வந்தார்.
மருத்துவத்தைக் கண்டபோது
மயங்குகிறாள் மங்கையரும்
"சரிந்த புகழ் மருத்துவமே!
சாகாமல் பிழைப்பேனோ?
அனியாய பாடு தெரியாமல்
அறியாமல் தவசிருந்தேன்.
கருவா ஜனிக்கையிலே—
கருமருந்தைத் தின்றே
னில்லை.
உருவா ஜனிக்கையிலே—
உள் மருந்தைத் தின்றேனில்லை'
அங்கமது நோகுதென்பாள்
அடிவயிறு பிசையுதென்பாள்
வயிறதுதான் நோகுதென்பாள்
வண்டதுபோல் உருளுதென்பாள்
ரெண்டு பிள்ளைக்குத்
தாயானேன்
இப்படிக்கு பட்டதில்லை.
மூன்றாவது கர்ப்பத்தோட
முடிந்துவிடும் என்னுயிர்
தான்.
என்று சொல்லி மங்கையரும்
ஏங்கியே துயரமானாள்.

### ஆதரவாய் சொன்னபோது

அந்த நேரம் மருத்துவமும்
ஆதரவாய் ஏது சொல்வார்.
"அம்மா மயங்காதே
ஆண் பிள்ளை தான் பிறக்கும்.
பிள்ளை பிறக்கும் நேரம்
பிரியமுடன் வந்ததம்மா.
மைந்தன் பிறக்கும் நேரம்
மகிமையுடன் வந்ததம்மா."
என்று சொல்ல மருத்துவமும்
ஏந்திழையாள் மனந்தேற்ற
லுற்றாள்.

### ஆண் குழந்தை அழகாய் பிறந்தது

அன்றுசிறு வயறுதள்ளி
ஆண் குழந்தை பிறந்திடுமாம்
பெற்றெடுத்த குழந்தையைத்
தான்
பிரியமுடன் மருத்துவமும்
கொப்புளறுத்து குலவையிட்டு
குளுப்பாட்டி சேனை போட்டி
நாளொரு மேனியுமாய்
பொழுதொரு வண்ணமுமாய்
வளர்ந்து வரும் நாளையிலே

### பிள்ளைக்குப் பேரிட்டார்

வாய்த்ததொரு பாலகனுக்குப்
பேரிடத்தான் வேணுமென்று
பிரியமுடன் நாள் பார்த்தார்.
ஆகாசத்தில் நின்றல்லவோ
அசரீரி வார்த்தை[1] சொல்லிடு
மாம்.
மெக்கியம் பெருமாள் என்று
மேன்மையுடன் பேருமிட்டாள்.
பேருமிட்ட பாலகனைப்
பெருமையுடன் வளர்க்கலுற்றார்.

### பிள்ளை பிறந்தது பெற்றவனுக்குக் கேடு

வளந்துவரும் நாளையிலே
வகையுடனே பாண்டியருக்கு
பொன்னும்பெருமாள் தேவருக்கு
புகழ் குறைந்து வருகுதய்யா.
ஒருநாளைக்கொரு நாள்
உற்ற கஷ்டம் வருகுதய்யா.
கையிலே கால் காசுமில்லை
கடன் கொடுப்பார் யாருமில்லே.
ஆள் இருந்த மனை முகட்டில்
ஆந்தை இருந்து கூப்பிடுமாம்

---

1. அசரீரி வார்த்தை—விண்ணினின்றும் மறைவாக கேட்கும் 'ஒலி'.

பொன்னும் பெருமாள் தேவருக்குப்
புகழெல்லாம் குறைந்திடுமாம்.
மைந்தன் பிறந்த நேரம்
மனையைவிட்டு அகலனுமே.
பிள்ளையது பிறந்த நேரம்
பூமிவிட்டுப் போகனுமே.
அருமை மகன் பிறந்த நேரம்
அடுத்த ஊர் போகனுமே
சொந்த மகன் பிறந்த நேரம்
சோற்றுக்குப் பஞ்சமாச்சே.

## நாடெல்லாம் பஞ்சம்

பஞ்சத்துக்குக் காரணம்
பாரில் மழை பெய்யவில்லை.
நாடு செழிக்கவில்லை
நல்ல மழை பெய்யவில்லை.
பஞ்ச நல்ல காலத்திலே
பகுதி பணம் கட்ட வேணும்:
இல்லாத வேளையிலே
இருசால் பணம் கட்ட வேணும்.
நாழி உருண்ட பஞ்சம்
நாயகனைத் தோற்ற பஞ்சம்
மரக்கால் உருண்ட பஞ்சம்
மன்னவனைத் தோற்ற பஞ்சம்
புட்டி உருண்ட பஞ்சம்
பொன் பொருளைத் தோற்ற பஞ்சம்
தாலிகளை விற்றல்லவோ
தவிடு வாங்கி தின்ற பஞ்சம்.

## தேவரின் திகைப்பு

பொன்னும் பெருமாள் தேவர் தானே
புகழுடனே ஏது செய்தார்.
தன்னுடைய மனைவியைத் தான்
தானே அழைத்து ஏது சொல்வார்
நாளைக்கி காலையிலே
நாமள் இங்கே இருந்தோமானால்
அட்டைக் கிடங்கினிலே[1]
அருங்கிளியே இறக்கிடுவார்.
முதுகுமேல் கல்லேத்தி[2]
மூர்க்கமுடன் நிறுத்திடுவார்.
அட்டை பிடுங்கிடுமே
ஆயுளுக்கே மோசம் வரும்.

## திகைப்பு திட்டமிட்டபோது

விடியவொரு சாமத்திலே
ஊரைவிட்டுப் போகனுமே
ஊரதிலே இருந்தோமானால்
ஓரழிவு வந்து சேரும்.
நாடதிலே இருந்தோமானால்
நாசகாலம் வந்து சேரும்.
அட்டக்குழியிலே தான்
ஆயிரம் பேரை இறக்கி வச்சேன்.
பகுதி கட்டாத பேர்களைத்தான்
பட்டினி போட்டதுண்டு[3].
இறுசால் கட்டாத பேர்களைத் தான்
ஏற்றி வைத்தேன் முதுகுக்கல்லை
அந்த நல்ல பாவமது
அனுபவிக்க வந்திருக்கே.
ஆனதினால் பெண்கொடியே
அத்தசாம நேரத்திலே
ஊரை விட்டுப் போகனுமே
சாம நல்ல வேளையிலே.

## ஊரைவிட்டு ஓடல்

தட்டி எழுப்பினார் மனைவியைத் தான்
தட்டுமுட்டு[4] சாமான்களை
தானே சுமை கட்டிக்கொண்டு
கட்டுசோறு கட்டினார்கள்.
கைவிளக்கு ஏத்தி வைத்தார்.
பொன்னும் பெருமாள் தேவரவர்
புறப்படவே பயணம் வைத்தார்.

---

1. அட்டைக் கிடங்கு—அட்டைகள் நிறைந்த கிடங்கு, தண்டனை முறையிது'
2. முதுகின் மேல் கல்லேற்றுவதும் ஒரு தண்டனை.
3. பட்டினி போடுவதும் ஒரு தண்டனை.
4. தட்டுமுட்டு—தேவையான.

## கைக்குழந்தை மேல் கவனமில்லை

சாமான்களைத் தலையில் வைத்தார்.
தலைமகளைத் தான்நடத்தி
சிக்கிரத்தில் புறப்படச் சொன்னார்.
சின்னமகளைக் கைப்பிடித்தார்.
காலவிதி வசத்தாலே
கைக்குழந்தை தான் மறந்து
சங்கர வடிவம்மாள்
தலைவாசல் வாராளே.

## தடையான சகுனங்கள்

தலவாசல் வாரபோது
தட்டுதடா நடையதுதான்.
அப்போதும் அறியலியே
அவசரமாய்ப் புறப்பட்டார்.
முடுக்கதிலே[1] வாரபோது
முடப்பூனை குறுக்கிடுமாம்.
ஆந்தை வந்து அலறிடுமாம்.
அபசகுனம் ஆகிடுமாம்.
பாலகனைத் தொட்டிவிட்டு
பாவையவள் போறதினால்
பட்டமரத்தில் பல்லியது
பலபலவென்று சொல்லிடுமாம்.
மண் கூவை தலை மேலே
மண்ணை வாரி இறைத்திடுமாம்.
கொண்டைதனில் உருமாலை
கொப்பு[2] பிடித்து இழுத்திடுமாம்
கண்ட கண்ட சகுனமெல்லாம்
காலாலே தள்ளிவிட்டு

## கோவிலைக் கும்பிடல்

ஊர்காக்கும் காளி கோவில்
உத்தமி முப்பிடாதி வாசலிலே
கையெடுத்து நமஸ்கரித்தார்
காளி கோயில் சுற்றிவந்தார்.
வெள்ளை வினாயகரை
வேண்டுமட்டும் நமஸ்கரித்தார்.

## வேகமாய் வழிநடத்தல்

பாளையாத்தாங் கால்கடந்து
படர்ந்த நதி கரையதிலே
தாம்பரவர்ணி கரைகடந்து
தானே வாரார் நால்வருமாய்.
ராசகோபால சமுத்திரத்து[3]
நாடுமிட்டு வாரார்கள்.
தென்றலது செழித்தோங்கும்
சிறந்த சவுக்கை தோப்பும்[4] விட்டு
வெள்ளைக்கரை[5] பாதைகூடி
வேகமுடன் வாரார்கள்.
சுத்தமல்லி[6] நாடும்விட்டு,
சுமைதாங்கி விலக்கு[7] மிட்டு,
கரிசல்குளம்[8] தான் கடந்து.
கவலையுடன் வாரார்கள்.
அதலிஊத்து[9] தான்கடந்து,
அன்னேரம் வாரபோது
கோழிக்கூவு நேரமாச்சே.
கொலுப்பிச்சி தோப்பும்[54] விட்டு
மானூர்[10] நாடதிலே
மங்கையுடன் வாராரே.

## மனதிலே மகன் எண்ணம்

மகனுடைய ஞாபகந்தான்
மனமதிலே தோன்றுதய்யா.
குழந்தையுடை ஞாபகத்தால்
கொண்டவனைத்தான் அழைத்தாள்
‘ என் கணவா பிரர்ணநாதா
என் குழந்தையைத்தான் தாருமென்றாள்
பிள்ளைக்குத் தான் பால் கொடுத்து
பிரியமுடன் போவோமென்றாள்

---

1. முடுக்கு—சந்து.
2. கொப்பு—கிளை.
3. ராசகோபால சமுத்திரம்.

4-10 ஊர்ப்பெயர்களும், இடப் பெயர்களும்.

பாலகனைத் தாருமென்று
பத்தினியும் கேட்டாளே.
பாலகன் என்ற சத்தம்
பத்தாவும் கேட்டாரே.

## தந்தையின் திகைப்பு

''சங்கரவடிவு தேவியரே
சங்கடங்கள் வந்ததம்மா.
அத்தசாம நேரத்திலே
அவசரமா ஓடிவந்தோம்
பாலகனை மறந்து வந்தோம்
பத்தினியே', என்றழுதார்
'மறந்து விட்டோம்' என்ற சொல்லை
மங்கையவள் காதில் கேட்டாள்.

## தாயின் துயரம்

அடித்தாளே முகமதிலே
இடித்தாளே அடிவயிற்றில்
முத்துப்போல் கண்ணீரை
முகமெல்லாம் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோரவிட்டாள்
''இதுக்கோ தவசிருந்தேன்
இத்தனைக்கோ பேரெடுத்தேன்.
சங்கரன் கோவிலிலே
தவசிருந்து பெற்ற மகன்
கருமம் செய்ய பெற்ற மகன்
கைவிட்டு வநதோமைய்யா.
தூங்குகிற பிள்ளையைத் தான்
தொட்டிலிலே போட்டு வந்தோம்.
மானூறு நாடதிலே
மங்கையரும் நானிருப்பேன்
ஓட்டமும் நடையுமாக
ஓடிப்போய் பிராணநாதா!
தொட்டிலோடு பிள்ளையைத் தான்
தூக்கிக் கொண்டு வாருமைய்யா'
என்று சொல்லும் வேளையிலே—

## விருப்பிருந்தும் விதியில்லை

''பாலகனை எடுக்கப் போனால்
பத்தா[1] வரப் போறதில்லை.
கைக்குழந்தை எடுக்கப்போனால்
கணவன் வரப் போறதில்லை
பிள்ளையது வேணுமென்றால்
பெற்று வளர்த்திடலாம்
சீக்கிரமாய் புறப்படு'', என்றான்
சீமான்பொன் பாண்டியனும்
அழுதகண்ணும் சிந்தையுமாய்
அன்னேரம் புறப்பட்டார்கள்.

## உக்கிரன் கோட்டை வரல்

மானூரு விலக்கும்[2] விட்டு
மஞ்சவிளை தோப்பும்[3] விட்டு
ரஸ்தா நல்ல பாதைகூடி
நலமுடனே வாரார்கள்.
சாலை பாதை வழியாகத்
தான் நடந்து வாரார்கள்
உக்கிரன் கோட்டையிலே[4]
சங்கரபாண்டித் தேவருட
வளவதிலே வாரார்கள்
பொன்னும் பெருமாள் தேவர் தானே
புகழுடனே வாரார்கள்.

## சங்கரன் கேட்டது

சங்கரபாண்டிய தேவரும்தானே
அங்கே வந்து ஏது சொல்வார்
''எங்கிருந்து இங்கே வந்தீர்?
எந்த ஊர் எந்த தேசம?''
என்று சொல்லும் நேரத்திலே
ஏதுசொல்வார் பாண்டியரும்

## பாண்டியனின் பதில்

தென்னாடு தேசத்திலே
சிறந்த தாம்பரவர்ணி அருகிலே
ராசகோபால சமுத்திரத்தில்
நலமுடனே ஆண்டு வந்தேன்.
வீரக்கரையாள ராசாவுக்கும்
வீரமார்த்தாண்ட பாண்டியர்க்கும்
தலையாரி வேலை பார்த்து வந்தேன்.
தானே அவர் இடமதிலே
அரண்மனைக்குத் தலையாரியாக
அண்ணாவே நானிருந்தேன்.

1. பத்தா—கணவன்.
2-4. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.

என்னுடைய விதி வசத்தால்
இங்குவந்து சேர்ந்தேனய்யா''
என்று சொல்லும் வேளையிலே—

**சங்கர பாண்டியனின் அன்பு**

ஏற்ற சங்கர் பாண்டியரும்
தன்னுடைய பத்தினியை
சாலாட்சி அம்மாளைத்
தானழைத்தார்
வந்த நல்ல பேர்களுக்கு
வகையுடனே உபசரித்தார்.
போசனங்கள் தான் கொடுத்து
புகழுடனே பேசலுற்றார்.
ஐந்தாறு நாளாக
அன்புடனே தானிருந்தார்.

**அன்பான அடைக்கலமே**

ஏழாவது நாளையிலே
இருப்பிடமும் தான் கொடுத்தார்
''ஏழு தலைமுறைக்கும்[1]
இங்கே தான் இருக்க வேண்டும்''
பொன்னும் பெருமாள் தேவரும்
பெண் கொடி சங்கர வடிவும்
வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்ப்பான சடைச்சியுமாய்
நாலு நல்ல பேர்களுமாய்
நலமுடனே ஆண்டு வந்தார்.

**விடியுமந்த வேளையிலே**

ராசகோபால சமுத்திரத்தில்
நடக்குதய்யா அதிசயங்கள்
விடிந்து ஒரு சாமமாச்சே
வெய்யோனும் உதயமாச்சே
கருங்காட்டு[2] ஊரதிலே
குடியிருந்து வாராளே
இருளி[3] என்ற வண்ணாத்தி
இக்கரைக்கு வாராளே.

**வண்ணாத்தியின் வருகை**

தாம்பரவர்னி கடக்கும் போது
தானே செருடன் வட்டமங்கே
கெங்கை[4] தாண்டி வாரபோது
கெருடனைத் தான் கண்டாளே.
வண்ணாத்தி இருளிக்குத் தான்
வருகுதய்யா யோகமது
அந்தனர்கள் பூசை பண்ணும்
அரசடியும் படி கடந்து
பாளையங்கால் தனைக்கடந்து
பள்ளருட வீதிவிட்டு
சிவன் கோயில் பாதைகூடி
சீக்கிரத்தில் வாராளே[5]
நாகக் குடும்பனுட தோப்பும்
விட்டு
நாமம் எழுதிவைத்த கிணறும்[6]
விட்டு
காளிகோவில்தான் கடந்து
கட்டுடனே வாராளே,

**பிள்ளையின் பேரழுகை**

பொன்னும் பெருமாள் தேவர்
வீட்டில்
பிள்ளைச் சத்தம் கேட்குதய்யா.
தொண்டைக்கட்டி அழுகுதய்யா
துவளுதே பிள்ளையது
அழுத சத்தம் காதில் கேட்டாள்
அன்புடைய வண்ணாத்தி
அம்மாவென்று சத்தம்
போட்டாள்
அங்கேதான் ஒருவரில்லை
அய்யாவென்று சத்தம்
போட்டாள்
அங்கேதான் ஒருவரில்லை.
கதவு தன்னைத் திறப்போ
மென்று
கையாலே தள்ளி பார்த்தாள்.
திறக்கத்தான் முடியவில்லை.
சீக்கிரத்தில் ஓடிவந்தார்.

**மன்னனிடம் முறையீடு**

ராச அரண்மனை வாசலிலே
நலமுடனே வந்து நின்றாள்.

---

1. ஏழு தலைமுறைகளையும் குறிப்பிட்டுச் சொல்வது வழக்கம்.
2. ஊர்ப்பெயர்.
3. இருளி—வண்ணாத்தியின் பெயர்.
4. கெங்கை—தண்ணீர்.
5. இடப்பெபர்.
6. கிணற்றுக்கல்லில் நாமம் எழுதியிருப்பது வைணவத் தொடர்பைக் காட்டும்.

''அய்யாவே ராச மன்னா
அடியாள் வார்த்தை சொல்லக் சேளும்.
பொன்னும் பெருமாள் தேவர் வீட்டில்
புள்ளை சத்தம் கேட்குதய்யா.
தலையாரி வீடதிலே
தாள்போட்டு பூட்டியிருக்கே''

## மன்னன் சொன்னது

ராச மன்னன் காதில் கேட்டு
நலமுடனே ஏது சொல்வான்,
''கம்மாளரைக்[1] கூட்டி வந்து
கதவு தன்னைத் திறந்திடுங்கோ
கதவு தன்னைத் திறந்திடுங்கோ
கைக்குழந்தை எடுத்திடுங்கோ
ஆரிரெண்டு வயதினிலே
அரண்மனையில் சேர்க்க வேண்டும்.''

## குழந்தையை எடுத்தார்கள்

அப்படியே சேர்ப்பேனென்றாள்
அழகுபிள்ளை வண்ணாத்தி
பொன்னும் பெருமாள் தேவர் வீட்டில்
பூட்டைத் திறக்கலுற்றார்.
பூட்டை மெல்லத் திறந்தாரே
புள்ளையத்தான் எடுத்தாரே

## வண்ணாத்தியின் மகிழ்ச்சி

மைந்தனைத்தான் எடுத்தாளே
மார்போட அணைத்தாளே.
குழந்தையைத் தான் எடுத்தாளே
கொங்கைப் பால் கொடுத்தாளே
கருங்காட்டு ஊருக்குத்தான்
கட்டழகி வந்தாளே.
பாண்டிய ராசா அந்நேரம்
பாற்பசுவை அனுப்பி வைத்தார்
பசுவினுட பால் கொடுத்து
பாலகனை வளத்து வாராள்,

## சிறப்பாக வளர்த்து வாராள்

தன்னுடைய மகனோட
தான் வளத்து வாராளே
இரண்டு நல்ல பிள்ளைகளை
இன்பமுடன் வளத்து வாராள்.
ஒரு வயது இரு வயது
ஏற்றதொரு பாலகர்க்கு.
தரையிலே விட்டோமானால்
தண்டைக்கால் நோகுமென்று
பூமியிலே விட்டோமானால்
பொற்பாதம் நோகுமென்று
நாளொரு மேனியுமாய்
பொழுதொரு வண்ணமுமாய்
வளத்துவரு நாளையிலே.

## பிள்ளைகளில் பேதமுண்டு

வாய்த்ததொரு பாலகனும்
வெள்ளாவித்துறை[2]யதிலே
விளையாடும் குழந்தைரெண்டும்
வண்ணாத்தி பெற்ற மகன்
வந்தவுடன் ஏது செய்வான்.
அழுக்குத் துணி எடுத்து
அடிப்பானே கல்லதிலே.
துண்டுகளை எடுத்து வந்து
துவைத்து மெல்ல உலற வைப்பான்
பாண்டியனார் பெற்ற மகன்
பட்சிகளை முறியடிப்பான்
கவண்[3] கட்டி வீசினாக்கால்
காக்கை வந்து தான் விழுமாம்.
பறந்து போற பட்சிகளைப்
பந்துபோல உருட்டுவானாம்.
அஞ்சு நல்ல வயதினிலே
அட்டாதுட்டி[4] பண்ணுவானாம்

## பள்ளிக்கு அனுப்பல்

அன்னேரம் வண்ணாத்தி
ஆதரவாய் ஏது சொல்வாள்.

---

1 கம்மாளர் – ஆசாரி சாதியினர்.
2. வெள்ளாவித்துறை – அடுக்குத்துணிகளை வெளுக்கும் இடம்.
3. கவண்—பறவைகளை வீழ்த்தும் பொறி.
4. அட்டாதுட்டி—குறும்பு.

பாலகர்தான் இருவரையும்
பள்ளிக்கூடம் அனுப்பனுமே
சோதிடரை அழைத்தல்லவோ
சொல்லுகிறார் இருளியவள்
"வாருமையா சோதிடரே!
வார்த்தையொன்று சொல்லக் கேளும்!
என்னுடைய பிள்ளைகளைப்
பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும்.
பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும்
பஞ்சாங்கம் பாருமென்"றாள்.

## மூத்தவனின் சாதகம்

மூத்த மகன் சாதகத்தை
முன்னே பாத்து சொல்லுகின்றார்,
"பள்ளிக்கூடம் போனாலும்
படிக்கத்தான் போறதில்லை.
மூத்தமகன் சாதகத்தில்
முட்டாளாய்த் தானிருப்பான்.
பன்னிரெண்டு வருசகாலம்
பள்ளிக்கூடம் போனாலும்
படிப்பு வரப் போறதில்லை,
பாலகி உன் மகன் தனக்கு
சடயோகமாகத்தான் இருப்பான்
தையலாளே உந்தன் மகன்."

## இளையவனின் சாதகம்

இளையமகன் சாதகத்தை
இன்பமுடன் பாருமென்றாள்.
சின்னமகன் சாதகத்தைச்
சீக்கிரத்தில் பாருமென்றாள்.
"சின்னமகன் சொந்தமில்லை.
சீருலகில் புகழுடையான்.
ஓராறு வயது வரை
ஒருகுறையும் இல்லையம்மா
ஈராறு வயதுக்குள்ளே
எக்கலையும் கற்றுணர்வான்.
பாண்டியன் குலமதிலே
பாலகனும் பிறந்ததுண்டு
கம்பெடுத்துக் காவல் செய்வான்
கடவுளென்று மதிப்பார்கள்.
முடிதரியா மன்னனுக்கு
முழுதுமே அரசு செய்வான்.
அவனாலே உந்தனுக்கு
அருமையோகம் வருகுதம்மா.
பன்னிரெண்டு வயதினிலே
பாண்டிய ராசா உனையழைப்பார்.
பாலகனை வளத்ததற்குப்
பரிசுனக்குத் தரப்போறார்.
நஞ்சை நிலம் மானியந்தான்[1]
நலமுடனே தரப்போறார்.
ராச யோகம் வந்திருக்கே
நலமுடனே பாலகர்க்கு".
இப்படியே சோதிடரும்
இன்பமுடன் சொன்னாரே.

## பள்ளியிலே பாண்டியன் மகன்

சோதிடரை அனுப்பிவிட்டு
தானேயந்த இருளியவள்
மறுநாளைத் தினமதிலே
மக்களைத்தான் படிக்கவைத்தார்
பள்ளிக்கூடம் தன்னதிலே
பாலகர்கள் படித்து வாரார்.
அரிச்சுவடி எண் சுவடி
குழிப்பெருக்கம் கொன்றை வேந்தன்
ஏழு நல்ல வயதினிலே
எழுத்தோலை வாசிப்பானாம்.
பசுக்கதையும் பாரதமும்
பதினெட்டு ராமாயணமும்
பன்னிரெண்டு வயதினிலே
பள்ளிவிட்டு வீடு வந்தான்.

## கற்ற வித்தைகள்

சிலம்பப் பள்ளிக் கூடமதில்
சேர்ந்து படித்து வாரான்
ஆணுக்கானா ஆணழகன்
அழகுமிக்கியம் பெருமாள் தேவர்
கூடுவிட்டு கூடு பாய்வான்
குறளிவித்தை தானுமுண்டு
மையுமுண்டு சிமிழுமுண்டு
மயக்கு வித்தை பாடமுண்டு
தூத்தும் நல்ல பொடியுமுண்டு
தூவுதற்கு மருந்துமுண்டு
வாடை நல்ல பொடியுமுண்டு
வளைப்பதற்கு மருந்துமுண்டு.
மூலையிலே இருக்கும் பெண்ணை

---

1. மானியம்—இனாமாக அளிப்பது.

முத்தத்திலே வரவழைப்பான்.
அடுக்களையில் இருக்கும்
பெண்ணை
அம்பலத்தில் வரவழைப்பான்.
ஏழறைக்குள் இருக்கும்
பெண்ணை
இழுப்பானே சந்தியிலே.
அம்மியூர மருந்து செய்வான்
ஐநூறு காதவளி
சுளவு[1] தட்டி பறக்க வைப்பான்
தொன்னூறு காதவளி.
உரலைப் பறக்க வைப்பான்
ஒன்பது காதவளி.
துள்ளியங்கே பாய்ந்தானானால்
தொன்னூறடி பாய்ந்திடுவான்.
எட்டியங்கே பாய்ந்தானானால்
எண்ணூறடி பாய்ந்திடுவான்.
சேராத பெண்களைத் தான்
சேர்த்து வைப்பான்
பாண்டியனும்
கூடாத பெண்களைத் தான்
கூட்டி மெள்ள வைத்திடுவான்.
வாழாத பெண்களைத் தான்
வாழும்படி சேர்த்து வைப்பார்.

### ஆணழகன் அவனானான்

முன்னழகைக் கண்ட பேர்கள்
மோகிப்பார் ஆயிரம் பேர்.
பின்னழகைக் கண்ட பேர்கள்
பிரமித்து நின்றிடுவார்.
முன்னழகும் பின்னழகும்
முகத்தினுட திருவழகும்
அள்ளித் தெளித்ததுபோல்
அங்கமெல்லாம் தேமல்களும்
கோரியங்கே தெளித்ததுபோல்
குங்குமகத் தேமல்களும்
வாரியங்கே தெளித்ததுபோல்
வைரமுத்துத் தேமல்களும்

### வயது பன்னிரண்டு

பன்னிரெண்டு வயதாச்சே
பரந்த மனசாச்சே
அன்னேர வேளையிலே
அரசகுல பாண்டியரும்
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்—
பொன்னும் பெருமாள் தேவருட
புதல்வனைத்தான் பார்க்க
வேண்டும்.

### காவலன் கட்டளை

காவலாளைத் தானழைத்து
கட்டழகர் ஏது சொல்வார்,
"கருங்காட்டு ஊரதிலே
கன்னி இருளியவள் வீடதிலே
வண்ணாத்தி வீடதிலே
வளருகின்ற பாலகனை
மெக்கியம் பெருமாள் பாலகனை
மேன்மையுடன் கூட்டிவாரும்.

### காவலாளர் சொன்னது

அன்னேரம் தூதுவர்கள்
அவசரமாய் ஓடிவாரார்.
கருங்காட்டு ஊரதிலே
காலாளும் வந்தல்லவோ
இருளியென்ற வண்ணாத்தியை
இன்பமுடன் தானழைத்தார்.
பொன்னும் பெருமாள் தேவருட
புகழ் பெரிய பாலகனை,
ராசமன்னர் அழைக்கச்
சொன்னார்.
நலமுடனே புறப்படென்றார்.

### அரண்மனைக்குச் செல்ல அலங்காரம்

அன்னேரம் இருளியவள்
அழைத்தாளே இளவரசை.
"அழைக்கின்றார் ராசமன்னர்
அருமையுடன் வாராய்" என்றாள்
அன்னேரம் வேளையிலே
அழகு மெக்கும் பெருமாளவர்.
கச்சை வரிந்து கட்டி,
கருங்கச்சை சுங்கலிட்டு,
முன்புறத்துச் சுங்கலிலே
மோகினியாள் சக்கரமாம்.
பின்புறத்துச் சுங்கலிலே
பிரமதேவன் அச்சரமாம்
வலதுபுறம் சுங்கலிலே
வடமலையான் அச்சரமாம்.
இடதுபுறம் சுங்கலிலே

1. சுளவு—முறம்.

ஏமனுட சக்கரமாம்.
சந்திரகாந்தி பொட்டுக்களாம்
சர்வத்துப்பட்டு வல்ல வட்டாம்
தங்கநல்ல தளுகையிலே
தங்கப் பூவாம் வெள்ளிப்பூவாம்
புஷ்பவகை எடுத்தல்லவோ
புகழுடனே வாரார்கள்.

### அரண்மனைக்கு வருகையில்

இருளியவள் பின்னுமாக
இளையமகன் முன்னுமாக
வண்ணாத்தி பின்னுமாக
வளத்தமகன் முன்னுமாக
கருங்காட்டு நகருமிட்டு
காளிகோவில் தான்கடந்து
வெள்ளாவித்துறை கடந்து
வேகமுடன் வாரார்கள்.
தாம்பரவர்னி ஓரமாக
தானே அவசரமாய் வாரார்கள்.
விஷ்வநாதர் வாசல்வழி
வேகமாக வாரார்கள்.
தாம்பரவர்னி நதிகடந்து
தானேபாளையங் காலுமிட்டு
சிவன்கோவில் தான்கடந்து
சீக்கிரமாய் வாரார்கள்.
பள்ளருட தாவளமும்
பட்டரையும் களஞ்சியமும்
நாகக் குடும்பனுட தோப்பும் விட்டு
நாமம் எழுதிவைத்த கிணறும் விட்டு
கனகக் குடும்பனுட வளவுமிட்டு
காளிகோயில் தான்கடந்து
துர்க்கை என்ற காளிகோவில்
சுற்றிவந்து கும்பிட்டார்கள்.
ராசனுடைய அரண்மனைக்கு
நலமுடனே வாரார்கள்.

### சீரான வரவு

மெக்கிம் பெருமாள் பாலகனும்
மேகம் போலே வாராரே
அரண்மனைக்குப் பாலகனும்
ஆளிபோல வாராரையா.
சிங்கம் போல வாராரையா
சீரான பாண்டியனும்.

### சிறப்பான வரவேற்பு

மண்டியிட்டு வணங்கி நின்றார்
மன்னன் பதில் வணக்கமிட்டார்
சிம்மாசனத்தில் இருந்த ராசா
திடுக்கிட்டு இறங்கி வந்து
கைகுலுக்கி அழைத்து வந்து
கமலாசனத்தில் அமர வைத்தார்.

### அரண்மனையில் வேலை

அம்பது பொன் சம்பளமும்
அருமை பாலகனே தாரோமென்றார்.
அம்பது பொன் சம்பளமும்
அன்றாட செலவுதானே
அறுவது பொன் வெகுமதியும்[1]
அருமையாகத் தந்திடுவேன்
அரண்மனையில் இருக்க வேண்டும்.
அப்படியே சம்மதித்தான்
அழகு மெக்கிம் பெருமாளும்.

### வளர்த்தவர்களுக்கு வேந்தன் பரிசு

இருளியென்ற பெண்ணவளை
ஏற்றராசா உடனழைத்து
அஞ்சு ஏக்கர் நிலமதுதான்
அவளுக்குச் சம்பளமாம்
அன்று எழுதி வைத்ததுதான்
இன்றுவரை துதிக்குதய்யா.
வாகை குளம்[2] தன்னதலே
வண்ணாத்தி போக்கு[3] என்றார்

### பாண்டியனின் பராக்கிரமங்கள்

இப்படியாய் அரண்மனையில்
இருக்கின்ற வேளையிலே,
அடங்காத குதிரைகளை
அடக்கிவைப்பான் பாலகனும்.

---

1. வெகுமதி—பரிசு.
2. ஊர்ப்பெயர்.
3. வண்ணாத்தி போக்கு—நிலத்தின் பெயர்.

கட்டுக்கடங்கா குதிரைகளைக்
கலங்கா அடித்திடுவான்.
தீராத வழக்குகளைத்
தீர்த்து வைப்பார் பாண்டியனும்.

### நாய் வளர்ப்பில் நாட்டம்

இப்படியாய் இருக்கும் போது
ஏது செய்வார் மெச்சும்
பெருமாள்
நாய் வளர்க்க வேணுமென்று
நலமுடனே பாண்டியரும்
ராஜபாளையம் ஊருக்குந்தான்
நலமுடனே எழுதலுற்றார்[1]
எண்ணி எட்டு நாளைக்குள்ளே
ரெண்டு நாய்கள் அனுப்ப
லுற்றார்
நாய்களைத் தான் வளர்க்க
லுற்றார்
நல்ல மெச்சும் பெருமாளும்.
வீமனென்றும் துஷ்டனென்றும்
வீரப்பேர் கொடுத்தாரய்யா.

### பாண்டியனின் தோற்றம்

ஈட்டி சமுதாடும்
ஏற்றதொரு குத்துக் கம்பும்
மீசை முறுக்கழகும்
மெய்சேர்ந்த பொட்டழகும்
கம்பெடுத்து வெளியில் வந்தால்
கடவுளென்று வணங்குவார்கள்
வண்ணாத்தி மகனுக்கு
வந்ததய்யா கல்யாணம்
கருங்காட்டு ஊரதிலே
கன்னி இருளி வண்ணாத்தி
மகனுக்குக் கல்யாணம்
மங்களமாய்நடத்தலுற்றாள்.
தாம்பூலம் வாங்குதற்கு[2]
தானழைத்தார் பாண்டியரை
தாம்பூலம் வாங்குதற்கு
தானும் வந்த பாண்டியரும்,

### மணப்பெண்மீது மோகம்

வண்ணாரப்பெண்ணைத் தானும்
வகையுடனே பார்த்தாரய்யா.
வண்ணாரப் பெண்மேலே
வைத்தாரே மோகமது
கன்னியின் மேல் காதல்
கொண்டார்
கட்டழகர் மெச்சும்
பெருமாள்.

### அம்மையிடம் சொன்ன ஆசை

அன்னேரம் பாண்டியரும்
அம்மையிடம் ஏது சொல்வார்
பன்னிரெண்டு வயதுவரை
பக்குவமாய் எனை வளத்தாய்
ராசாவின் இடமதிலே நல்ல
சேவகமும் வாங்கி தந்தாய்.
உரிமையுடன் வளத்ததினால்
உனக்குச் சம்பளமும்
தந்தாரம்மா.
என் வார்த்தை தட்டாமல்
எனக்குப் பதில் சொல்லுமம்மா—
உன்
மருமகளும் நானுமிங்கே
மருவி[3] விளையாடனுமே
மன்மதனும் ரதியும்போல்
மகிழ்ந்து விளையாடனுமே:
உன்னுடைய தயவதுதான்
உத்தமியே வேணுமம்மா."

### வண்ணாத்தி சொன்ன விளக்கம்

அன்னேரம் வண்ணாத்தியும்
அருமையுடன் ஏது சொல்வாள்,
"மருமகள் இடத்திலே தான்
மங்கையரும் நான்கேட்டு
சம்மதத்தால் ஆனக்கால்
சமர்த்துள்ள என் மகனே!
வெள்ளாவி துறையதிலே
வெள்ளை அரசு மரமதிலே
தெற்கே போற கொப்பதிலே
சிகப்புபட்டு போட்டிருப்பேன்.
மாட்டேனென்று சொல்லி
விட்டால்
மகனேயொன்று சொல்லக்கேளு.
வடக்கப் போற கொப்பதிலே

---

1. ராஜபாளையத்தில் நல்ல நாய்கள் உண்டு.
2. திருமண வீட்டில் உயர்ந்த பெரியவர்களுக்குத் தாம்பூலம் அளிப்பதுண்டு.
3. மருவி – கலந்து.

வாடப் போட்டிருப்பேன் வெள்ளைச் சீலை
வெள்ளைச் சீலை போட்டிருந்தால்
வேந்தே நீ வரவேண்டாம்,
சிவப்புச் சீலை போட்டிருந்தால்
சீக்கிரத்தில் வந்திடுங்கோ''
அன்னேரம் பாண்டியனை
அரண்மனைக்கு அனுப்பி வைத்தாள்.

## மாமியும் மருமகளும்

மறுநாளைக் காலையிலே
மகனுமங்கே ஏது செய்வான்?
கழுதைகளைப் பத்திக் கொண்டு
கட்டுடனே புறப்பட்டான்.
உவர்[1] அள்ளி வாரேனென்று
உத்தமனும் போறானே
மாமியாரும் மருமகளும்
மகிமையுடன் தனித்திருந்தார்.

## மாமியார் மெச்சியது

கோபால சமுத்திரத்தில்
கொற்றவாளி வம்மிசத்தில்
பாண்டியமார் வம்மிசத்தில்
பக்குவமாய் பிறந்த பிள்ளை.
தாயாரும் தகப்பனும்
தனியே போட்டுவிட்டு போய் விட்டார்.
பன்னிரெண்டு வயதுவரை
பாலகனை நான் வளத்தேன்.
பன்னிரெண்டாம் வயதினிலே
பாண்டிராசனிடம் ஒப்படைத்தேன்.
ஒன்பது ஏக்கர் நிலமதுதான்
சம்பளமாய் தந்தார்கள்.
உன்மேலே மனதாகி
உருகுகிறான் உன்னாலே
மையல் கொண்டு மயங்குகிறான்
மருமகளே என்ன செய்வேன்.
அஞ்சாறு நாளாச்சே
அன்னந் தண்ணி[2] இறக்கவில்லை.
உன்னாலேதான் பெண்ணரசே
உயிர் கொடுக்க வேணும் கண்ணே.
ஆகட்டுமென்று சொன்னால்
ஆயிரம் பொன்தான் கொடுப்பார்.
நாவதுதான் அசைத்தாயானால்
நாலாயிரம் பொன் தான் கொடுப்பார்''
என்று சொல்லும் வேளையிலே

## மருமகளின் மறுமொழி

ஏதுசொல்வாள் மருமகளும்.
''என்ன வார்த்தை சொல்ல வந்தாய்
என்னுடைய அத்தையரே.
நம்முடைய சாதியிலே
நாம் தவறி நடந்தோமானால்
சாதி விலக்கி வைப்பார்
தரக்குறைவாய் பேசிடுவார்.
நன்மை தீமைக்குச் சேரமாட்டார்
நம்மிடத்தில் சம்மந்தம் செய்ய மாட்டார்.''
என்று மருமகளும் சொன்ன போது—

## மாமியாரின் மாற்றுமொழி

ஏது சொல்வாள் மாமியாரும்,
''அரசரைப் பகைத்தோமானால்
அறுப்பாரடி நம்தலையை.
பாண்டியரைப் பகைத்தோமானால்
பழுதுவந்து சேருமடி.
ஊரார் உரன்முறையார்
ஒருவருமே வேண்டாம் கண்ணே.
அரசனுட உறவிருந்தால்
ஆயுள்வரை ஆளலாமே''
என்றுசொல்லும் வேளையிலே

## மருமகளின் சம்மதம்

ஏதுசொல்வாள் மருமகளும்
'அப்படியே நல்லதென்றாள்''

---

1. உவர்,-துணி வெளுக்கப் பயன்படும் மண்ணாகும்.
2. அன்னந்தண்ணி உணவும் நீரும்.

அன்னேரம் பெண்கொடியாள்.
வெள்ளாவி துறையதிலே
வெள்ளை அரசமரம் தன்னதிலே
தெற்கப் போற கொப்பதிலே
சிவப்புப்பட்டு கட்டலுற்றார்.

## பாண்டியன் பார்த்த அடையாளம்

கோபால சமுத்திரத்தில்
கொற்றவாழி வம்முசத்தில்
மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஏதுசெய்தார்.
சாயங்கால நேரத்திலே
சந்தியா வந்தனம்[1] செய்ய வந்தார்.
வெள்ளாவி துறையைத் தானும்
வேந்தனுமே பாக்கலுற்றார்.
பார்த்ததொரு நேரத்திலே
பாண்டியர்க்கு மோகமாச்சே
கண்டாரே கொடியைத் தானும்
காதல் கொண்டார் பாண்டியரும்.
வண்ணாரப் பெண்மேலே
வைத்தாரே ஆசையல்லோ.

## பள்ளி கொள்ள புறப்பட்டார்

மூந்தி கருக்கலிலே[2]
முதற்சாமவேளையிலே,
கச்சை வரிந்து கட்டி
கருங்கச்சை சுங்கலிட்டு,
முன்புறச் சுங்கலிலே
மோகினியாள் அச்சரமாம்.
பின்புற சுங்கலிலே
பிரமதேவன் அச்சரமாம்
இடதுபுற சுங்கலிலே
ஏமனுட அச்சரமாம்
வலதுபுற சுங்கலிலே
வடமலையான் அச்சரமாம்
சந்திரகாந்த பொட்டுகளாம்.
சருகை துப்பட்டா வல்ல வட்டாம்.
குத்துக்கம்பு வல்லயமாம்.
கொடுக்கரிவாள் தானெடுத்தார்.
பாசக் கயிறு கைபிடித்து
பாண்டியனாரும் பயணம் வைத்தார்.
நாய்களைத் தான் அழைத்துக் கொண்டு
நலமுடனே வாராரே

## தெய்வங்களைத் தெரிசித்தல்

துர்க்கை என்ற காளி கோவில்
சுற்றி வந்து தெண்டனிட்டார்.
காச்சி நாயும் பூச்சி நாயும்
கட்டுடனே அழைத்துக்கொண்டு
பள்ளருட தாவளமும்
நெல்பட்டரைக் களஞ்சியமும்
நாகக் குடும்பனுட தோப்பும் விட்டு
நாமமிட்ட கிணறும் விட்டு
சிவன் கோவில் தான் கடந்து
சிறந்த பாளையங்கால் கடந்து
தாம்பிரவர்ணி கால் கடந்து
தானே வாரார் பாண்டியரும்
விஸ்வநாதர் ஆலயமும்
வெள்ளாவித் துறையுமிட்டு
கருங்காட்டு நகரதிலே
கட்டழகர் வாராரே.

## வண்ணாரப் பெண்ணின் வரவேற்பு

கண்டாரே பாண்டியரைக்
கட்டிலிட்டாள் மெத்தையி விட்டாள்:
கட்டிலிட்டு மெத்தையிட்டு,
கனகமணி விளக்குமேத்தி
வெளுத்துவைத்த சேலைகளை
விரித்தாளே மெத்தை மீது

## கூடிக்களித்தனர் கலவியில்

வண்ணாரப் பெண்ணவளும்
வந்ததொரு பாண்டியனும
மன்மதனும் ரதியும் போல்
மருவி விளையாடலானார்.
வேண்டுமட்டும் விளையாடி
வெற்றிலையும் தின்று துப்பி

---

1. சந்தியா வந்தனம்—மாலையில் நடக்கும் சூரிய வணக்கம்.
2. மூந்தி கருக்கல்.

விடியவொரு சாமத்திலே
வெண்கோழி சத்தம் கேட்டு
தன்னுடைய அரண்மனைக்கு
தானே வந்தார் பாண்டியனும்
அன்று முதல் பாண்டியனும்
அனுதினமும் போய் வருவார்.
இப்படியே சில காலம்
இன்பமாய் நடக்குதய்யா.

## பெற்றோர்களின் இறப்பு

வடநாடு தேசத்திலே
வாய்த்த உக்கிரங்கோட்டையிலே
சங்கரபாண்டியன் வளவதிலே
சந்தோசமாக ஆண்டு
வந்தார்.
பொன்னும் பெருமாள் தேவரும்
சங்கர வடிவு அம்மாளும்
வளத்த ராக்கி பெண் கொடியும்
வகையுடனே இருக்கும்போது
தாயாரும் தகப்பனும்
தாளடைந்தார் சிவலோகம்.
மக்கள் இரு பேரும்
மயங்கியே இருந்தார்கள்.

## விவகார வழக்கொன்று

இப்படியாய் இருக்கும்போது
ஏற்றதொரு நாடதிலே.
உக்கிரங் கோட்டையிலே
ஒரு விவகார வழக்கதுதான்
எட்டோட எட்டு நாளாய்
எடுத்து பேசினர் வழக்கைத்
தானே.
விவகாரம் முடியவில்லே.
வேறுசோலிகளும்[1] நடக்கவில்லே.

## ஒருவர் சொன்ன யோசனை

அதிலொரு பாண்டியரும்
அன்புடனே ஏது சொல்வார்.
தொன்னாடு தேசத்திலே
சிறந்த தாம்பரவரினி
கரையதிலே
கோபால சமுத்திரத்தில்
கொற்றவாழி வம்முசத்தில்
அரண்மனைக்குத் தலையாரி
அதிகாரி கர்த்தாவாம்
அவரிடத்தில் போறோமானோல்
அன்னே முடிக்கலாமே
விவகாரத்தை''

## வழக்குக்காய் வழி நடந்தார்

அன்றைய தினம் கழித்து
அடுத்த நாள் காலையிலே
உக்கிரங் கோட்டைக்காரர்
ஊர் அடங்கலுமே பயணம்
வைத்தார்.
கட்டமுது கட்டினார்கள்
கடுகெனவே வழி நடந்தார்.
தாம்பரவர்ணி கரையதிலே
ஸ்நானம் செய்தார் எல்லோரும்
கட்டுச்சாதம் அவிழ்த்து வைத்து
கட்டுடனே சாப்பிட்டார்கள்,

## பெருமாளைப்பார்க்கும்போது

சாப்பிட்டு இளைப்பாறி
சந்தோசமாக எல்லோரும்
மெச்சும் பெருமாள் பாண்டியரை
மேன்மையுடன் பார்க்க
வேணடும்
என்று சொல்லி வார போது
மெச்சும் பெருமாளைக்
கண்டார்கள்.
சங்கர பாண்டிய தேவருமே
சந்தோசமாக வணங்கி நின்றார்'
பதில் வணக்கம் செய்தாரய்யா
பாண்டியர் மெச்சும் பெருமாள்.

## வரவினை விசாரித்தல்

''எந்த ஊரு எந்த தேசம்
என்ன செய்தி'' சொல்லு
மென்றார்.
உக்கிரங் கோட்டை நகர்
உற்ற சங்கர பாண்டிய
தேவர்
சொல்லுகிறார் பாண்டியரும்
சோதிக்கிளி வாய்திறந்து
மூங்கிலடித் துறைலேயே

---

1. சோலி—வேளை.

முடிக்க வேண்டும் விவகாரத்தை[1]
தாம்பிரவர்ணி கரையதிலே
சவுக்கையடி தோப்பதிலே
தோணித் துரையருகே
தொளாயிரம் பேர் கூடினார்கள்.

## பெருமாளின் தோற்றம்

மெச்சும் பெருமாள் தேவரும்
மேன்மையுடன் வாராரே.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் போட்டுக் கொண்டு
குதிரையேறி வரும்போது
கூட்டி வாரார் நாய்களிரண்டை
சிங்கம்போல வாராரே
சீமான் அந்த பாண்டியரும்
விவகாரம் கேட்டு வாரார்
விசியங்களை அறிந்து வாரார்.

## தீராதது தீர்ந்தது

தலைவருடைய வழக்கை
யெல்லாம்
தான் முடித்தார் பாண்டியரும்
தீராத விவகாரத்தைத்
தீர்த்தாராம் பாண்டியரும்.
உக்கிரங் கோட்டைக்குத் தான்
ஊரெல்லாம் புறப்பட்டார்கள்.

## வந்து நின்றாள் வண்ணாத்தி

மூங்கிலடித் துறை கடந்து
முன்னே வாரார்கள்
பாண்டியர்கள்.
வெள்ளாவித் துறையதிலே
வெளுத்து நின்ற வண்ணாத்தி
கூட்டத்தைக் கண்டாளே
குடிகேடு வந்திருக்கோ
ஓடிவாராளே வண்ணாத்தி
உத்தமர் சங்கர பாண்டியரிடம்
"உங்கள் விவகாரம் முடிந்தது
வோ
உத்தமரே சொல்லுமய்யா"

## புகழ்பாடி போற்றினார்

"மறவருடைய விவகாரத்தை
மங்கையரே கேட்கலாமோ
உக்கிரங்கோட்டை விவகாரத்தை
ஒரு ஊரிலும் முடிக்கவில்லை.
முடியாத வழக்குத் தானே
முடிந்ததடி இந்த ஊரில்.
தீர்த்தபதி வம்முசத்தில்
சிங்கக் குட்டி முடித்ததடி.
பாண்டியமார் வம்முசத்தில்
பதினாயிரம் பேர் இருக்கமடி
மெச்சும் பெருமாளைப்போல்
மேன்மை பெற்றோர்
ஒருவரில்லை."
என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வாள் வண்ணாத்தி.

## தொடக்க கதை சொன்னாள்

"அய்யாவே பாண்டியரே
அடியாள் வார்த்தை சொல்லக்
சேளும்
இவருடைய தாய் தந்தையர்கள்
ஏற்ற பேர் சொல்லுகின்றேன்.
பொன்னும் பெருமாள் தேவரும்
பூவாள்[2] சங்கர வடிவு
அம்மாளும்
வாழ்ந்து வரும் நாளையிலே
வந்ததய்யா பஞ்ச காலம்.
பஞ்ச நல்ல காலத்திலே
பகுதி கட்ட முடியாமல்
இந்த ஊரைவிட்டுப் பயண
மானார்
மூத்த மகள் வளத்தராக்கியும்
இளைய மகள் சடைச்சியரும்
தட்டுமுட்டு சாமான்களை
தானே சுமை கட்டிக் கொண்டு
துவளும் குழந்தையைவிட்டுவிட்டு
துரிதமுடன்[3] பயணம் வைத்தார்
மைந்தனைத் தொட்டிலில்
போட்டு விட்டு

---

1. விவகாரம் – வழக்கு.
2. பூவாள் – பூவினைப் போன்ற சிறப்புக்குரியவள்.
3. துரிதமுடன்—வேகமுடன்.

மதிமறந்து போய்விட்டார்கள்.
காலையிலே எடுத்து வந்து
கண்மணியை நான் வளர்த்தேன்.
அஞ்சு நல்ல வயதிலேதான்
அறிவு பள்ளியிலே படிக்க
வைத்தேன்.
ஏழுநல்ல வயதிலே தான்
எக்கலையும் படிக்க வைத்தேன்.
பன்னிரண்டு வயதிலேதான்
பாண்டியரிடம் ஒப்படைத்தேன்.
இவனுடைய தாய் தந்தையர்கள்
எந்தஊர் போனாரோ
எவ்விடத்தில் சென்றாரோ.

### சங்கர பாண்டியனின் சந்தோசம்

என்று சொல்லும் வேளையிலே
ஏதுசொல்வார் தலைவருமே.
''இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே
இந்தஊர் வந்து சேர்வேன்
பெண்ணே.''
பாலும் பழமும் தான்கொடுத்
தாள்
பாண்டியரும் பசியாறி தான்
போனார்.

### தமக்கைகளிடம் தெரிவித்தல்

வளத்தராக்கி சடைச்சியரை
வரவழைத்தார் இருபேரையும்.
''உங்களுடை நாட்டுக்குத்தான்
ஒரு விவகாரம் கொண்டு
போனோம்.
அந்த நல்ல விவகாரத்தை
அருமையாக முடித்தாரம்மா.
உன்னுடைய தம்பியென்று
ஊரெல்லாம் புகழுதம்மா.
அரசுகட்டி ஆளுகின்றார்
அருமையான தம்பி,'' என்றார்.

### தம்பியைக் காணவரல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஆண்டுவாரார்.
அக்காளும் தங்கையரும்
அன்னேரம் பயணம் வைத்தனர்.
உக்கிரங் கோட்டை விட்டு
உத்தமனும் கூட்டிவாரார்.
மானூறு விலக்கும் விட்டு
மங்கையரைக் கூட்டிவாரார்
அரலி ஊத்து தான்கடந்து,
அந்தக் கருச குளம் பாதைகூடி
சுத்தமல்லி தான்கடந்து,
சுமைதாங்கி விலக்குமிட்டு
வெள்ளக்கரை பாதை கூடி
வேகமுடன் வாரார்கள்.
தாம்பிரவர்ணி தான்கடந்து
சந்தோசமாக வாரார்கள்
ராச கோபால சமுத்திரத்தில்
நலமுடனே வாரார்கள்.
மெச்சும் பெருமாள் பாண்டியனை
மேன்மையுடன் பாத்தாரய்யா.

### சிங்கார பாண்டியன் சொன்னது

''உங்களுடைய தாய்தகப்பன்
ஊரைவிட்டு புறப்படையில்,
துவளும் குழந்தையிலே
உன்னைத்
தொட்டிலிலே போட்டுவிட்டு,
பெண்மக்கள் இரண்டுபேரை
பிரியமுடன் அழைத்துக்
கொண்டு,
என்னுடைய ஊரதிலே
ஏகமுடன் [1] தானிருந்தார்.
தாயாரும் தந்தையாரும்
தமக்கையரை தான் மறந்து,
மாண்டு மடிந்தார்கள்
மண்ணுலகை மறந்தார்கள்.
அக்காமார் இருபேரை
அருமையுடன் நான் வளத்தேன்.
இதுவரையும் பாதுகாத்தேன்,''
என்றுசொல்லி ஒப்படைத்தார்.

### திருமண எண்ணம்

ஒப்படைத்த தமக்கையரை
உடன் அழைத்தார் வீடதற்கு.

1. ஏகமுடன்—தனிமையுடன்.

ஆதியிலே உள்ள வீட்டில்
அன்புடனே ஆண்டு வாரார்.
வளத்தராக்கி பெண்ணுக்குத் தான்
வயது மெள்ள வந்ததய்யா.
மாப்பிள்ளை பார்க்கணுமே
மாங்கலியம் பூட்டணுமே
தாலிகட்ட மாப்பிள்ளைதான்
தான்பார்க்க வேணுமென்றும்
கலியாணம் நடத்தனுமே
கண்குளிரப் பாக்கனுமே.
என்று சொல்லி பாண்டியரும்
எண்ணுகின்ற வேளையிலே—

## கொழுமடையில் பெண் கேட்டல்

கொழுமடை[1] ஊரதிலே
குடியிருக்கும் பாண்டியரில்
காளிமுத்துத் தேவரவர்
கட்டுடனே ஆண்டுவாரார்.
அவருடைய பாலகர்தான்
ஆரியப்பட்டத் தேவரவர்.
ஆரியப்பட்டத் தேவருக்கு
அந்த ராக்கிப் பெண்ணைக்
கேட்டார்கள்.

## பெண்கொடுக்க நிபந்தனை

"அன்னேரம் பாண்டியரும்
ஆதரவாய் ஏது சொல்வார்.
கொளுமடை ஊருக்குத்தான்
பெண் கொடுக்க வேண்டுமானால்
அந்த நல்ல ஊரைவிட்டு
இந்த ஊருக்குத்தான் வர வேண்டும்.
கோபால சமுத்திரத்தில்
குடியிருக்க வேண்டு'',மென்றார்.

## நிச்சய தாம்பூலம்

அப்படியே சம்மதித்தார்
ஆரியப்பட்டத் தேவரவர்.
நிச்சயத் தாம்பூலம் செய்யலுற்றார்
நின்றதொரு சனங்களெல்லாம்.

## பஞ்சாங்கம் பார்த்தல்

பஞ்சாங்கப் புரோகிதரைப்
பார்த்தழைத்து வந்தார்கள்.
பொருத்தமது பார்க்கலுற்றார்
புகழ்பெரிய பாண்டியமார்.
இருபத்தொரு பொருத்தமது
ஏகமுடன் இருக்குதய்யா.

## முகூர்த்தப் பட்டோலை

சித்திரை மாத்தையிலே
சிறந்த இருபதாம் தேதியிலே
முகூர்த்த பட்டோலை[2] எழுதலுற்றார்
முடிதரியா பாண்டியர்கள்.

## முகூர்த்தக்கால் நடல்

சித்திரை மாத்தையிலே
சிறந்த இருபத்தோராம் தேதியிலே
நாள் கால்[3] நாட்டினார்கள்
நாள் செங்கல்[4] போடலுற்றார்.
முத்தைப் பிளந்தார்கள்
முகூர்த்தக் கால் [5] போடலுற்றார்.

## பந்தல் அலங்கரித்தல்

நாணல் பிளந்தார்கள்
நாற்காதம் பந்தலிட்டார்.
பதினைந்து காதவழி
பவளத்தால் பந்தலிட்டார்

---

1. ஊர்ப்பெயர்.
2. முகூர்த்தப் பட்டோலை—முகூர்த்த நாளைக் குறிப்பிட்டு ஓலையில் எழுதுவது.
3. நாள் கால்—பந்தலுக்கான காலை நாட்டுதல்.
4. நாள் செங்கல்—மணமேடைக்கான செங்கல்லை வைத்தல்.
5. முகூர்த்தக்கால்—அரசு மரத்துக் கிளையோடு பூ, வெற்றிலை வைத்து கட்டி நடுதல்.

பந்தலிட்ட வாசலிலே
பார்வாழை தான் நிறுத்தி
சாந்தாலே தரைமெழுகி
சந்தணத்தால் கோலமிட்டு
கோலமிட்ட வாசலிலே
குலைவாழை தான்நிறுத்தி

## மணப்பெண்ணை அழகு செய்தல்

வளத்தராக்கிப் பெண்கொடியை
வகையுடனே ஏதுசெய்தார்.
சம்பங்கி எண்ணைகொண்டு
தலை தடவி சிக்கெடுத்தார்.
பீதாம்பர பட்டெடுத்துப்
பிரியமுடன் கட்டலானார்.
ஆபரண நகைகளெல்லாம்
அலங்கரித்தார் பெண்கொடிக்கு.

## மணவறையில் மாங்கல்யம்

மாப்பிள்ளையும் பெண்ணையும் தான்
மணவறைக்கு அழைத்துவந்தார்.
ஊராரும் உரண் முறையாரும்
உற்றாரும் ஒன்று சேர்ந்தார்.
பஞ்சாங்க புரோகிதரும்
பார்த்து ஓமம் வளக்கலுற்றார்.
ஓமப்புகை எழும்ப
ஊரெல்லாம் குலவையிட்டார்.
வாத்தியங்கள் எல்லாமே
வகை வகையாய்த் தான் முழங்க.
மாணிக்கச் சங்கதுதான்
வலப்புறத்தில் நின்றூத[1]
மாங்கலியப் பெண்களெல்லாம்
வாழ்த்தியே குலவையிட்டார்.[2]

## மாங்கலிய முடிச்சுகள்

ஆரியப்பட்ட பாண்டியரு
அன்னேரம் வேளையிலே
செப்புதன்னைத் தான் திறந்தார்
திருமாங்கலியம் கையிலெடுத்தார்.
பிரமமுடி விஷ்ணுமுடி
பீஷ்மமுடி மூன்றுமுடி[3]
பெண்கொடிக்கித் தான்முடித்தார்.

## மணவறையைச் சுற்றல்

மாப்பிள்ளையும் பெண்கொடியும்
மணவறையைச் சுற்றிவந்தார்.
அம்மிமிதித்தார்கள்.
அருந்ததியைப் பார்த்தார்கள்.
ஆலாத்திப் பெண்களெல்லாம்
ஆவலுடன் எடுத்து வந்தார்.
வந்த சனங்களுக்கு
வழங்கலுற்றார் தாம்பூலம்.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் தரித்தார்கள்.

## பட்டின பிரவேசம்

மறுநாளைத் தினமதிலே
மன்னவர்க்கும் தேவியர்க்கும்.
பட்டினபிரவேசம்[4] நடத்தலுற்றார்.
பாண்டியமார் எல்லோரும்.

## எண்ணைச் சடங்கு

ஏழாநீர் கழிவதற்கு
எண்ணைச் சடங்கு[5] நடத்தலுற்றார்.
வந்திருந்த பாண்டியமார்
வரிசைகளைச் செய்யலுற்றார்.

## இனிதாக முடிந்தது

அவரவர்கள் ஊர்களுக்கு
ஆதரவாய்ப் போகலுற்றார்.
ஆரியப்பட்டத் தேவரும்
அம்மை வளத்தராக்கியுந்தான்

---

1. சங்கு—திருமணத்துக்கு ஊதப்படும் சங்கு.
2. குலவை—நாவால் விடப்படும் குலவை ஒலி. (மங்களமுள்ளது).
3. மூன்று முடி—தாலிக் கயிற்றில் போடப்படும் முடிச்சுகள்.
4. பட்டின பிரவேசம்—மணமக்கள் ஊர்கோலம் செல்லுதல்.
5. எண்ணைச் சடங்கு—

மன்மதனும் ரதியும்போல்
மவுசாக ஆண்டுவந்தார்.
வாழ்ந்திருந்தார் சிலகாலம்
வர்ணநிறக் கிளி போல.
ஆரியப்பட்ட தேவர்தானே
அப்பாவூரை மறந்து விட்டார்.

## சடைச்சிக்கும் சடங்கு

இப்படி இருக்கும்போது
ஏற்ற தங்கை சடைச்சியவள்
பதினாறு வயததிலே
பக்குவதியாய்[1] இருக்காள்.
சாஸ்திரம் பாத்தல்லவோ
சடங்கு கழித்தார்கள்.

## பெண் கொடியின் பேரழகு

பெண்ணுக்குப் பெண்ணழகி
பேதைமயிலழகி.
தங்கத்தைச் சரிக்கிடலாம்[2]
தனிவண்டை ஒப்பிடலாம்
பொன்னை சரிக்கிடலாம்
பூமாதை ஒப்பிடலாம்.
பொன்னை ஒளிக்கியங்கே[3]
பூமியிலே கவிழ்த்ததுபோல்,
தங்கத்தைக் காச்சியல்லோ
தரையிலே கவிழ்த்தது போல்,
ஈயத்தைக் காச்சியல்லோ
இலையிலே கவிழ்த்ததுபோல்,

## கறுப்பில்லா கட்டழகி

இலுமிச்சைப் பழத்துக்கானால்
இருண்ட கருப்புமுண்டு.
மாதுளம் பூவிலேயும்.
மையிருண்ட கருப்புமுண்டு.
சூரியனுக்கு ஆனாலும்
சுற்றிவர கருப்புமுண்டு.
சந்திரனுக்கு ஆனாலும்
சற்றே கருப்புமுண்டு.
சீதையர்க்கு ஆனாலும்
சென்னைப்பக்கம்[4] கருப்பு
முண்டு.
துரோபதைக்கு ஆனாலும்
தோளுபக்கம் கருப்புமுண்டு.
வளத்தராக்கியுட தங்கைதானே
வான்மையுள சடைச்சியர்க்கு
தலைதான் கருப்பே ஒழிய
தானேஒரு கருப்புமில்லை.
புருவம் கருப்பொழிய
பின்னே ஒரு கருப்புமில்லை.
தன்னழகு போதுமைய்யா
தங்க நகை வேண்டாமே
தங்கை சடைச்சிக்குத்தான்
தங்க நகை பூட்டலுற்றார்.

## தங்கையின் திருமணம்

ஆச்சிவூர்[5] நகரத்திலே
அரிராம. பாண்டியர்தான்.
அரிராம பாண்டியர்க்கு
அழகு சடைச்சியைத்தான்
மணமுடித்துக் கொடுத்தாரே
மன்னன் மெச்சும் பெருமாள்.

## அரசனின் அழைப்பு

இப்படியாய் சிலகாலம்
இன்பமுடன் கழிகையிலே
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட பாண்டியனும்
மெச்சும் பெருமாள் பாண்டியரை
மேன்மையுடன் அழைத்தாரே.

## காஞ்சியில் கடும்பஞ்சம்

"நாடான நாடதிலே
நல்ல வடநாடு தேசத்திலே
காஞ்சிபுரம் பட்டணத்தில்
கடுமையான பஞ்சமய்யா
பன்னிரண்டு வருடகாலம்'
பருவமழை பெய்யவில்லை

---

1. பக்குவதி—பூவைப் பருவம்.
2. சரிக்கிடலாம்—ஒப்பிடலாம்.
3. ஒளிக்கி—உருக்கி.
4. சென்னைப் பக்கம்—காதோரத்துக் கன்னம்.
5. ஊர்ப்பெயர்.

பருவமழை இல்லாமல்
பஞ்சம் வந்து சேர்ந்ததய்யா.
நாழி உருண்ட பஞ்சம்
நாயகனைத் தோற்றபஞ்சம்.
மரக்கால் உருண்ட பஞ்சம்
மன்னவனைத் தோற்ற பஞ்சம்.
பொட்டி உருண்டபஞ்சம்
புருசனைத் தோற்ற பஞ்சம்
மக்களைதான் விற்ற பஞ்சம்
மன்னவரை இழந்த பஞ்சம்.
தாலிகளை விற்றபஞ்சம்
சரட்டுக்கயிறு போட்ட பஞ்சம்.

## கொள்ளையர்களாதல்

இப்படியாய் பஞ்சகாலம்
ஏதுசெய்வார் கள்ளநாட்டார்.
காஞ்சிபுரம் நாடதிலே
கசவருட பட்டணத்தில்
கள்ளநாட்டார் ஒன்று கூடி
களவுசெய்ய புறப்பட்டார்கள்.

## தென்னாடே திருடர்களம்

''தென்னாடு போகனுமே
தீவட்டிக் கொள்ளைப் போடனுமே
கன்னக்கோல் ஆக்கனுமே
கையறுவாள் வல்லயமும்
குத்துக்கம்பு வல்லயமும்
கொடுக்கறுவாள் சமுதாடும்
பூட்டை மெள்ள முறிக்கனுமே
போய்களவு செய்யனுமே.
கன்னமது போட வேண்டும்
களவு செய்து திரும்பவேண்டும்''
பதிமூன்றுபேர் கள்ளநாட்டார்.
பக்குவமாய்ப் புறப்பட்டார்கள்.

## தென்னாட்டுக்குத் திருட பயணம்

காஞ்சிபுரம் நாடுமிட்டு
சைவர் பட்டணம்[1] தான் கடந்து
வன்னிகரந்தை[2] தேவர்குளம்[3]
வன்னிக்குத்தி மறவரய்யா
களவுக்கு ராசாளி
கறுப்பண்ணத் தேவரவர்.
தேவர்குளம் நாடதிலே
சேகரமாய்[4] வீற்றிருந்தார்.
அன்றுபகல் கழிந்த பின்னே
அத்த ராத்திரி பயணம் வைத்தார்.

## நெல்லையப்பரை வணங்கல்

அழகியபாண்டி புரமும்[5] விட்டு
அவசரமாய் வாரார்கள்,
மானூறு விலக்குமிட்டு
மற்றந்த கள்ளநாட்டார்
ராமையம்பட்டி[6] தான் கடந்து
நலமான கள்ள நாட்டார்
நெல்லையம்பலம்[7] நாடதிலே
நெல்லையப்பரை வணங்கிவிட்டு
குறுக்குத்துறை[8] தான் கடந்தார்
கொள்ளை போடும் கள்ள நாட்டார்.

## வீரபத்திரர் வீடுவரல்

விளாகத்து விலக்கு[9]மிட்டு
வேகமுடன் வாரார்கள்.
தாம்பிரவண்ணி நதியுமிட்டு
தானே வாரார் கள்ளநாட்டார்.
முன்னீர் பாளையம்[10] ஊரதிலே
முந்திக் கருக்கலிலே வாரர்கள்.
துப்புவாதி[11] வீடதிலே
துரிதமுடன் வாரார்கள்.
அத்தசாம நேரத்திலே
அடைகதவு தட்ட லுற்றார்.
வீரபத்திரத் தேவர்
வேகமுடன் எழுந்திருந்தார்.

---

1-3. ஊர்ப்பெயர்
4. சேகரமாய் – சிறப்பாய்.
5-10. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.
11. துப்புவாதி—துப்பு சொல்கிறவன், ஒற்றன்.

## வீரரின் கோபம்

"ஆரடா ஏ பயலே
அடைகதவு தட்டுறவன்?
பாளையப்பட்டு நானிருக்கப்
பயமில்லாமல் வந்ததென்ன?
ஊரும் பேரும் சொல்லா விட்டால்
உயிரை மெல்ல வாங்கிடுவேன்''
என்று சொல்லுற வேளையிலே

## கறுப்பசாமியின் கூற்று

ஏதுசொல்வார் கள்ள நாட்டார்
''களவுக்குத் தலைவன் அண்ணே
கறுப்புசாமி வந்தேன் அண்ணே.
காஞ்சிபுரம் கறுப்பனென்றால்
கடவுளுக்கும் அஞ்சமாட்டான்''

## வந்தவரை வரவேற்றல்

கறுப்பசாமி என்றபோது
கதவை மெள்ள திறக்கலுற்றார்.
'வாரும் பிள்ளாய் தம்பி' என்றார்.
வந்தசேதி சொல்லு மென்றார்.
கறுப்பசாமி தேவர்தானே
கட்டுடனே[1] ஏதுசொல்வார்,
''பன்னிரெண்டு வருடகாலம்
பாரில் மழை பெய்ய வில்லை.
பஞ்சம் வந்து சேர்ந்ததினால்
பார்க்க வந்தோம் தென்னாடு
களவு செய்ய வந்தோமெ''ன்று
கட்டழகர் சொல்லலுற்றார்,

## தேவர் சொன்ன துப்பு

வீரபத்திரத் தேவரவர்
வேகமுடன் ஏதுசொல்வார்
''களவு செய்ய இடமுமில்லே
கன்னம் போட வழியுமில்லே.
இரும்பு ஊசி களவு போனால்
ஏற்ற தங்க ஊசி வாங்கிடுவேன்.
ஆனால் ஒரு துப்பதுதான்
அருமையுடன் சொல்லக்கேளும்.
கோபால சமுத்திரத்தில்
குடியிருக்கார் குடும்பக்கமார்.
நாகநல்ல குடும்பனென்றும்
கனக நல்ல குடும்பனென்றும்
பள்ளருட தாவளத்தில்
பணம் அதிகம் இருக்குதய்யா
ஏழுகிடாரத்[2] திரவியந்தான்
இருக்குதய்யா அங்கேதான்
ஆயக்காலில்[3] தொங்குதய்யா
அனுதினமும் கேட்டதுண்டு.
கோபால சமுத்திரம் போனாக்கால்
கொள்ளை போட்டு வரலாமே.
காவலில்லை கட்டுமில்லை
காவலுக்கோ மறவரில்லை.''
என்று சொல்லும் வேளையிலே
ஏது செய்தார் கள்ளநாட்டார்,

## கோபால சமுத்திரம் அடைதல்

முன்னீர் பள்ளம் நாடு மிட்டு
பாளையங்கால் பாதை கூடி
தருவை[4] நல்ல நாடுமிட்டு
தருமராசா கோவில் விட்டு
பச்சையாறு விலக்கு[5] விட்டு
பாளையங்கால் கரைவழியே
கிளாக்குடையார் வாசல்[6] வழி
கிருபையுடன் கள்ளநாட்டார்
சீரரமையர் வாசல்[7] வழி
சீக்கிரத்தில் வாரார்கள்.
பசுங்கிளி அய்யர் வாசல்[8] வழி
பறக்குளம்[9] தான்கடந்து
நாகக் குடும்பனுட வளவதிலே
நலமுடனே வாரார்கள்.

## கன்னக் கோல் வைத்தல்

கனகக் குடும்பனுட வளவதிலே
கண்டார்கள் கட்டிடத்தை
கல்லறைத்தான் துளைக்கும்

---

1. கட்டுடனே — சிறப்புடனே
2. ஏழுகிடாரம் — பெருங்கலம்
3. ஆயக்கால் — முட்டுக்கட்டை
4-9. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.

கன்னக்கோலை எடுத்தார்கள்.
செங்கல்லைத் துளைக்கும்
சிறு ஆக்கராவைத்தான் எடுத்தார்.
அத்தசாம நேரத்திலே
ஆளரவம் இல்லா வேளையிலே
கன்னமது போடலுற்றார்
கதவுகளைத் தான் திறந்தார்.
கீழ்த்தாளை மேல்த்தாளை
கிருபையுடன்[1] துறக்கலுற்றார்
வெங்கலக் கதவுதன்னை
வேகமுடன் திறக்கலுற்றார்.
தங்க நல்ல களஞ்சியத்தைத்
தான் பார்த்தார் கள்ளநாட்டார்

### கவனமுடன் கொள்ளையிடல்

எவ்விதத்தில் களவுசெய்வோம்
எப்படி நாம் கொண்டு போவோம்.
வாடாத[2] மணிவிளக்கு
வலது பக்கம் எரியுதய்யா.
கள்ளருக்குத் தலைவன்தானே
கறுப்பசாமி தேவரவர் –
"கலங்காதிங்கோ மயங்காதிங்கோ
காவலுக்கு ஒருவரில்லை" என
ஏழு கிடாரத் திரவியத்தை
ஏகமுடன் வாரலுற்றார்.
வயிரங்களும் முத்துக்களும்
வாரிவாரி கட்டலுற்றார்.

### களிப்புடன் குலவையிடல்

கட்டிநல்ல சுமையாக்கி
கழுதைமேல் பொதியேத்தி
கழுதைகளைப் பத்திக் கொண்டு
கைத்தட்டிக் குலவையிட்டார்.[3]
நாகக்குடும்பனுட வளவுமிட்டு
நல்லசிவன் கோவில் விட்டு
பாளையங்கால் தான் கடந்து
பதின்மூன்று பேர் கள்ள நாட்டார்
தாம்பிர வன்னி தன்னதிலே
தாகவிடை தான் தெளித்தார்
கருங்காட்டு ஊரதிலே
கடுமையான குலவையிட்டார்.

### குலவை கேட்டல்

குலவைச் சத்தம் காதில் கேட்டார்.
குழந்தை மெச்சும் பெருமாள் பாண்டியனும்
வண்ணாத்தி வீடு விட்டு
வாராரே பாண்டியரும்.
காச்சிநாயும் பூச்சிநாயும்
கடுமையுட வருதய்யா.
கள்ளருட குலவை சத்தம்
காச்சி நாயும் கேட்டிடுமாம்.
வீமனென்ற நாயதுதான்
வேகமுடன் வருகுதய்யா.
துஷ்டனென்ற நாயதுதான்
துள்ளி ஓடி வருகுதய்யா.
நாயுடனே பின் தொடர்ந்தார்
நலமான பாண்டியரும்.

### கறுப்பசாமியின் கலக்கம்

கள்ளருக்குத் தலைவன்தானே
கறுப்பசாமி ஏது சொல்வான்.
"குலவையிட்ட மோசத்திலே
குடிகேடு வந்ததய்யா
வீடு விட்டு வாரபோது
விடியவில்லை பல திசையும்.
கோட்டை விட்டு வார போது
தகை இருந்து அழுததுவோ.
என்ன மோசம் வந்திடுமோ
என்று சொன்னார் கறுப்பசாமி.

### கள்ளருடன் கடுமையான சண்டை

கறுப்பசாமி சொல்லுமுன்னே
காலை பிடித்திடுமாம் நாயதுதான்

---

1. கிருபை — கவனம், எச்சரிக்கை.
2. வாடாத — அணையாத, அசையாத
3. வெற்றிக்கு அறிகுறியாகக் குலவையிடல்

மெச்சும் பெருமாள்பாண்டியனும்
மேகம்போல் விரைந்து வாரார்.
தொட்டிநல்ல பாலத்திலே
துள்ளியோடி குதித்தாரய்யா.
சிங்கம்போல பாய்ந்தாரய்யா
சீமான் அந்த பாண்டியனும்
பூனைபோல் பதுங்கலுற்றார்
புலிபாய்ச்சல் பாயலுற்றார்.
பதிமூன்றுபேர் கள்ளர்களைப்
பாய்ந்து பாய்ந்து வெட்டலுற்றார்.
உற்றதொரு கள்ளர்களை
ஓடி ஓடி வெட்டலுற்றார்.
மெச்சும் பெருமாள் இடமதிலே
மின்னே[1] நிற்பார் ஒருவரில்லை.

## பாண்டியனின் வெற்றி

சந்தோசப் பட்டாரே
சமர்த்துள்ள பாண்டியரும்
கழுதைமேல் பொதிகளையும்,
கட்டழகர் தள்ளிவிட்டார்.
ஆயுதத்தை அலம்பியங்கே[2]
அன்னேரம் ஏது சொல்வார்.
''குலவை சத்தம் எங்கே போச்சி
கூட்டமது எங்கே போச்சி''
என்று சொல்லி பாண்டியரும்
ஏகமுடன் வாராரே.

## பள்ளர்களிடம் தெரிவித்தல்

தொட்டிபாலம் தான்கடந்து
துளசிமடம் தான் கடந்து
தாம்பிர வன்னி தான் கடந்து
தானே பாளையங்காலும் கடந்து
நாகக் குடும்பனுட வளவதிலே
நலமான பாண்டியரும்
பள்ளர்களை எழுப்பியல்லோ
பாண்டியரும் ஏது சொல்வார்.
''கனகக் குடும்பா நீ கேளு
களஞ்சியங்கள் எங்கே போச்சி
நாகக் குடும்பா உனது
நாட்டாண்மை எங்கே போச்சி
ஏழுகிடாரத் திரவியந்தான்
இருக்குதோ பாருமென்றார்.
பூமியிலே போட்டிருந்தால்
பூதங்கொண்டு போகுமென்று,
ஆயக்கால் போட்டுவைத்தாய்
அருமையான திரவியத்தை
வடநாட்டுக் கள்ளர் வந்து
வாரிக்கொண்டு போய் விட்டார்.
கருங்காட்டு ஊரதிலே
கண்டேனே கள்ளர்களை.
ஓடவிட்டு தலையறுத்தேன்
உங்கள் திரவியத்தை நான் காத்தேன்
கழுதையிலே பொதி ஏத்தி
கள்ளநாட்டார் கொண்டு போனார்.
பொதி பணத்தைக் குமித்திருக்கேன்
போய் வாரிக்கொண்டு வாங்க
அரண்மனைக்கு நான் போறேன்
அள்ளிவாடா பொன்னை,'' என்றார்.
அரண்மனையில் போய் படுத்தார்
அழகுப்பிள்ளை பாண்டியரும்.

## தப்பிவிட்டான் ஒரு திருடன்

கருங்காட்டு ஊரதிலே
கள்ளருட படுகளத்தில்
பன்னிரெண்டு பேர்களை வெட்டும்போது
பாவி அதிலொருவன்
ஓடி ஓடி வெட்டும்போது
ஒளிந்திருந்தான் ஒருபாவி.
பாண்டியன்தான் போனபோது
பதறிகண்ணை முழித்தானே.
பதறி எழுந்தானே
பலதிசையும் பார்த்தானே.
தப்பிப் பிழைத்தேனென்று
தானோடி போறானே.

## பள்ளர்கள் வந்தனர்

பள்ளர்கள் எல்லோரும்
பதறி ஓடி வாரார்கள்.

1. மின்னே — முன்னே
2. அலம்பி — கழுவி;

கருங்காட்டு ஊரதிலே,
கள்ளருட படுகளத்தில்
கால்துண்டா கிடக்கிறதும்
கை துண்டா கிடக்கிறதும்
தலை துண்டா கிடக்கிறதும்
தான் கண்டார் குடும்பக்கமார்கள்.

கனக நல்ல குடும்பனுட
காலும் கையும் நடுங்குதய்யா
நாகக் குடும்பனுட
நாவு வறளுதய்யா.
திரவியத்தை வாரிக்கொண்டு
சீக்கிரமாய் வாரார்கள்.

### பாண்டியர்க்குப் பரிசு

பள்ளருட தாவளத்தில்
பணத்தைக் கொண்டுசேர்த்தார்கள்.
மறுநாளைக் காலையிலே
மன்னர் பாண்டியரைப் பார்க்க வந்தார்.
தங்கநல்ல தளுகை[1]யத்தான்
தானெடுத்தார் கையதிலே.
தங்கப்பூவாம் வெள்ளிப்பூவாம்
தானெடுத்து வைத்தார்கள்,
பழவகைகள் எல்லாம்
பரத்தி வைத்தார் தளுகையிலே.
மல்லிகை முல்லைகளுடன்
மலர்ந்த இருவாச்சியும்
இலுமிச்சம் பழமும் கொண்டு
இன்பமுள்ள குடும்பக்கமார்கள்
ஆயிரம் பொன் ஒரு முடிப்பு
அவசரமாய் எடுத்து வைத்தார்.
ராசாவைக் காணோமென்று
நலமுடனே வந்தார்கள்.

### அரண்மனையுள் நுழைதல்

அரண்மனை தன்னருகே
ஆசார வாசலிலே
கூட்டமிட்டுத் தானிருந்தார்
குடும்பக்கமார் எல்லோரும்.
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
மெச்சும் பெருமாள்பாண்டியரும்
மேகம் போல் வந்திருந்தார்.
மூவர்களும் இருக்கும்போது
முன்னே வந்தார் குடும்பக்கமார்.
கையெடுத்து நமஸ்கரித்தார்
கனகமணி ராசாக்கள்.

### நன்றிக்கடன் நவிலல்

வந்தசேதி சொல்லுமென்றார்
வகையுடனே பாண்டியரும்
நாக நல்ல குடும்பனவன்
நலமுடனே ஏது சொல்வான்?
''வடநாட்டுக் கள்ள நாட்டார்
வந்து கொள்ளைப் போட்டார்கள்.
திரவியத்தை வாரியல்லோ
தீவிரமாகப் பொதிகள் வைத்தார்.
கழுதைமேல் பொதிகள் ஏத்தி
கருங்காடு போகையிலே,
கள்ளர்களை அடித்துக் கொன்று
கழுதை பொதிகளைக் கீழே தள்ளி
எங்களிடம் வந்து சொன்ன
எசமானைப் பார்க்க வந்தோம்,''
தங்க தளுகை கீழே வைத்து
தலைகுனிந்து வணங்கி நின்றார்.

### மன்னர்களின் கோபம்

வீரமார்த்தாண்ட பாண்டியர்க்கு
வீசை துடிக்குதய்யா.
கண்களிலே பொறிபறக்க
கடுங் கோபத்தோட தானழைத்தார்.
'மெச்சும் பெருமாளுட
மேன்மையது போச்சுதய்யா.
அண்ணன் தம்பிபோல நாமும்
அரண்மனையில் ஆண்டுவந்தோம்.
கூடி இருந்ததென்ன.
கூட்டுசோறு உண்டதென்ன?
பெற்ற நல்ல பிள்ளைபோல
பிரியமுடன் வைத்திருந்தேன்,
இன்றுமுதல் என்னுடைய
இடத்திற்கே ஆகாதே.

1. தளுகை — தட்டு, தாம்பாளம்,

கொலையாளி கூடத்தானும்
கூட்டுறவு வைத்திருந்தோம்.
அரண்மனையில் இதுவரைக்கும்
அன்பாக உண்டதினால்,
வேணுமென்ற வெகுமதியை
வேண்டுமட்டும் கேட்டிடுவாய்''
என்று சொல்லும் வேளையிலே
ஏதுசொல்வார் பாண்டியரும்

### கேட்டது கிடைத்தது

'உம்பளமும்[1] சம்பளமும்
ஒன்றுமேதான் வேண்டாமே.
திசைகாவல் வேணுமென்றார்''
செல்லப்பிள்ளை பாண்டியரும்.
''அப்படியே தந்தேன்'' என்றார்
அழகுத் துரைப் பாண்டியரும்.

### செப்புப்பட்டயம் எழுதுதல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஏதுசொல்வார்.
ஆயிரம் வருசத்துக்கு
அழியாமல் இருக்க வேண்டும்.
பிள்ளை பிள்ளை தலை முறைக்கும்
பேர் சொல்ல வேணுமென்றார்.
செம்பு நல்ல பட்டயத்தில்
திசை எழுதித் தரவேண்டும்
கம்மாளரை அழைத்து வந்து
கட்டுடனே எழுதலுற்றார்.

### எல்லைகளும் குறித்தல்

நாலு திசைகளையும்
நலமுடனே எழுதலுற்றார்.
மானாட்டான்[2] சாலைக்குத் தான்
மகிமையுடன் வடக்கே அய்யா.
பச்சையாற்றுக்கு மேற்கேதான்
பக்குவமாய் எழுதலுற்றார்.
பத்தமடையாபிள்ளை பாலத் துக்கும்[3]
பச்சமுடன் கிழக்கே
தவனகோவிலுக்குத்[4] தெற்கே தான்
தயவுடனே எழுதலுற்றார்,
சுலுசு பாலத்திற்கு[5] தெற்கே தான்
துரிதமுடன் எழுதலுற்றார்
கருங்காட்டுக்குத் தெற்கேதான்
கட்டழகர் எழுதலுற்றார்.
''கல்லும் காவேரி உள்ளமட்டும்
காவல் காத்து வருவாய்'',
என்றார்.

### கட்டழகன் காவல்வேலை

சந்தணம் தாம்பூலம் கொடுத் தல்லவோ
தான் கொடுத்தார் பட்டயத்தை
செப்புபட்டயம் வாங்கியல்லோ
சேகரமாகப் பாண்டியனும்
அன்றுமுதல் காவல்களை
அனுதினமும் காத்து வாரார்.
காவலுக்கோ கம்பெடுப்பார்
காச்சிநாயும் பூச்சி நாயும்.
கல்லெறிய கவணெடுப்பார்
கைதனிலே பாச்சக்கயிறும்.
ஈட்டிசமுதாடும்,
ஏற்றதொரு வல்லயமும்,
முந்திகருக்கலிலே
முதச் சாம வேளையிலே
காவலுக்குப் பயணம் வைத்தார்
கட்டழகர் பாண்டியரும்.

### மகசூல் கட்டும் முறை

காவல் காக்கும் வேளையிலே
கஷ்டம் வந்து சேர்ந்ததய்யா.
மாசம் ஒருதடவை
மகசூல் பிரிக்க வேண்டும்
அந்தந்த மாத்தைப்[6] பணம்

---

1. உம்பளம் — மானியநிலம்
2-5. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்
6. மாத்தை — மாதம்

அனுப்பணுமே அம்பைக்குத்தான்
மாசம் ஒரு தலையாரி
மாசூல் பணம் கொண்டுபோனும்.
ஆருடைய முறையது தான்
அன்னேரம் வருகுதய்யா.
பாண்டியச முறையதுதான்
பகவானே வந்ததய்யா
மெச்சும் பெருமாள் முறையதிலே
மிராசுதாரும் தானழைத்தார்,

### பயணத்துக்கு ஏற்பாடு

கண்ணுவலி வந்ததய்யா
கட்டழகர் பாண்டியர்க்கு.
அன்னேரம் பாண்டியரும்
அக்காமாரைத் தானழைத்தார்.
''அம்பாச முத்திரந்தான்
போகனுமே
அருமை அக்கா நீ கேளு.
சீக்கிரத்தில் இருபேரும்
செய்திடுங்கோ சமையலது.
கட்டமுது கட்டிடுங்கோ
கட்டழகு தம்பியர்க்கு.
அடிச்சமையல் செய்தாள்
உருத்துள்ள[1] தம்பியர்க்கு.''

### உண்டு இளைப்பாறல்

தலைவாழை இலை விரித்து
தண்ணீரதுதான் தெளித்தாள்.
சாதம்கறி தான் படைத்தார்
தம்பியர்க்கு அன்னேரம்.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் தான் போட்டு,

### அம்பைக்குப் புறப்படல்

கச்சை வரிந்து கட்டி,
கருங்கச்சை சுங்கலிட்டு,
பாச்ச கயிறு எடுத்தார்.
பருவயிர தடி எடுத்தார்.
ஈட்டி சமுதாடுகளும்
எடுத்தாரய்யா கைகளிலே.
குத்துக் கம்பு வல்லயமும்
கொடுக்கரிவாள் தானெடுத்தார்.
நாய்களைத்தான் அழைத்துக்
கொண்டு
நலமுடைய பாண்டியரும்
இஸ்திபணம் கொண்டு போக
கிருபையுடன் பயணம் வைத்
தார்.

### அக்காமார்களிடம் வழியனுப்பல்

அக்காமார் இருபேரை
அன்புடனே, தானழைத்து,
''கட்டுசாதம் தானெடுத்து
கையதிலே தந்திடுங்கோ.
கண்ணுவலி உபத்திரமும்[2]
கண்முழிக்கக் கூடுதில்லை.

### சகோதரிகள் கண்ட சகுனங்கள்

வளத்தராக்கி வந்ததல்லவோ
வழிச்சகுணம் பார்க்கலுற்றாள்.
புறப்படும்போது இறப்பிடுமாம்.
பின்னங்கால் தட்டிடுமாம்.
முடுக்கதிலே வாரபோது
முடப்பூனை குறுக்கிடுமாம்.
தலவாசல் தாண்டும் போது
தட்டிடுமாம் வாசநடை.
தலைவாசல் தட்டினதை
தமக்கையரும் கண்டாரே.

### தமக்கை தடுத்தல்

''தலைவாசல் தட்டுதடா
தம்பியரே என்பிறவி.
வாசல்படி தட்டினாக்கால்
வாணாளுக்கே சேதம் என்பார்.
பூனை குறுக்கிட்டால்
பொல்லாத சகுணமென்பார்.
நான் கண்ட கனவதுதான்
நம் தம்பியர்க்கு ஆகாதும்பா.
சண்டாளி கண்ட கனா
சங்கடமா தெரியுதப்பா,
என்னமோசம் வந்திடுமோ
ஏகவேண்டாம் தம்பியரே.

1. உருத்துள்ள — அக்கரையுள்ள.

2: உபத்திரவம் — துன்பம்.

ஆகாத சகுனமப்பா
அருமை தம்பி போகவேண்
டாம்.''

## தம்பியின் தேற்றுதல்

என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வார் பாண்டியரும்
''என்புத்தி கேட்டவர்கள் கோடி
யுண்டு
பெண்புத்தி கேட்டுப் பிழைப்ப
துண்டோ?
அஞ்சவேண்டாம் மலை[1]ய
வேண்டாம்
அக்காமாரே பயம் வேண்டாம்.
அம்பாசமுத்திரந்தான்
அருமையுடன் போய் வாரேன்,''
என்று சொல்லி வழியனுப்பி
ஏகமுடன் பயணம் வைத்தார்.

## தடைமீறிய பயணம்

காகம் வந்து கத்திடுமாம்
கறும்பூனை குறுக்கிடுமாம்
கண்ட கண்ட சகுணமெல்லாம்
காலாலே தள்ளிவிட்டு
காளிகா தேவியரைக்
கையெடுத்து வணங்கிக் கொண்டு
முப்பிடாதி அம்மாளை.
முடிவணங்கி தெண்டனிட்டார்.
பாளையங்கால் பாதைகூடி
பரு நடையாகத்தான் நடந்தார்.

## பெரும் பயணம் போகின்றார்

வீமனென்ற நாயதுதான்
வேகமுடன் நடக்குதய்யா.
துட்டனென்ற நாயதுதான்
துள்ளி நடக்குதய்யா.
கீழச்சேவல்[2] பாலம் விட்டு
கிளுவடித்துறை[3] கடந்து
தேசமாணிக்கம் விலக்கும்[4] விட்டு
சிவந்தி பாலம்[5] தான் கடந்து
சேரன் மகாதேவியிலே[6]
அப்பன் கோவில்[7] தான்கடந்து
வீரகம்பதியு[8]மிட்டு
வெள்ளாங்குழி நாடும்[9] விட்டு
அம்பா சமுத்திரம் வந்தல்லவோ
ஆணழகர் பாண்டியரும்

## உணவு உண்ணல்

கட்டமுது சாப்பிட்டரே
கட்டழகர் பாண்டியரும்.
மிச்சமுள்ள சாதமெல்லாம்
முன்னே நின்ற நாய்களுக்கு
நாய்களுக்கு விருந்து வைத்தார்
நலமான பாண்டியரும்.

## பணம் செலுத்துதல்

பணம் கட்டும் ஆபீசிலே
பணத்தை மெல்ல கட்டலுற்றார்
செலுத்தின பணத்துக்குத்தான்
சீட்டெழுதி தான் கொடுத்தார்.
சீட்டை வாங்கி வெளியில்
வந்தார்
செல்லப்பிள்ளை பாண்டியனும்

## திரும்புகிற வழியில்

கண்ணுவலி வேதனையால்
கவலைப்பட்டு வாராரே.
சோலையபுரம்[10] கடந்து,
துளசி மடம்[11] விலக்கும் விட்டு,
ஊர்க்காடு[12] தான் கடந்து,
உற்றமாஞ்சோலை[13] தனைக்
கடந்து,
வெள்ளாங்குழி விலக்குமிட்டு;
விரகம்பதி கடந்து
பாட்டாளியார் வீதிவிட்டு,
பாவோடும் தெரு கடந்து,
சேரன்மகா தேவி விட்டு,
செல்லப் பிள்ளை பாண்டியனும்
கண்ணூரெண்டும் வேதனையால்
கண்முழிக்க முடியாமல்,

---

1. மலைதல் — பிரமித்தல்,

2-13. ஊர்ப் பெயர்களும் இடப்பெயர்களும்.

கவிழ்ந்ததலை நிமிராமல்
கட்டழகர் வாராரையயா

## பாலத்தில் தங்கல்

அப்பன் கோவில் பாதைகூடி,
ஆத்தாங்கரை விலக்கு[1] மிட்டு,
கரிசூழ்ந்த மங்கலமும்[2]
கட்டுடனே தான் கடந்து'
பாளையங்கால் தன்னதிலே
பத்த மடையாபிள்ளை பாலத்திலே
பாலத்திலே வாரபோது,
படுசாம நேரமாச்சே
பாலத்திலே உட்கார்ந்தார்.
பாண்டியரும் நாயுமாக.
கவிழ்ந்ததலை நிமிராமல்
கவலை கொண்டு இருக்கும் போது,
கரிசூழ்ந்த மங்கலத்தில்

## கள்ளர்களின் வருகை

கன்னமிட்ட கொள்ளை நாட்டார்
வன்னிக்கறந்தை தேவர்குளம்
வன்னிக்குத்தி நாட்டார்கள்
களவு செய்து வாரார்கள்.
கள்ளர்களும் அந்நேரம்.
கள்ளர்களைக் கண்டதய்யா
கட்டழகர் நாய்களெரண்டும்
கள்ளரைத்தான் துரத்துதய்யா
கடும்பாய்ச்சல் பாயுதய்யா.
கள்ளர்கள் அன்னேரம்
கண்டார்கள் நாய்களைத்தான்.
அதிலேயொரு கள்ளநாட்டான்
அடையாளம் கண்டானே.

## கள்ளன் சொன்னது

கண்டதொரு கள்ள நாட்டான்
கவனமுடன் ஏது சொல்வான்,
"வாருங்க வோய்[3] அண்ணர்களே
வார்த்தையொன்று சொல்லக் கேளும்
முந்தினக் களவதிலே
மோசம் செய்த நாய்களது.
விட்டுவிட்டால் மோசமண்ணே.
வினைகள் வந்து சேருமண்ணே.
நாய்கள் கூட வந்தவர்தான்
நலமான பாண்டியர்தான்
இந்தவேளை விட்டு விட்டால்
இறக்கிறது நிச்சயந்தான்."
என்று சொல்லி கள்ளநாட்டார்
ஏழுபேரும் ஒன்றாய் கூடி
இப்படியாய் பேசும் போது,

## பாண்டியரின் முன்னெச்சரிக்கை

ஏற்றதொரு பாண்டியர்க்கு
'நாய்கள் குலைப்பதென்ன
நாமள் தலை கவிழ்ந்திருப்பதென்ன,
என்று சொல்லி பாண்டியரும்
இரு கண்களைத்தான் துடைத்தார்.
கச்சை வரிந்து கட்டி
கருங்கசசை சுங்கலிட்டார்.
எடுத்து வைக்கும் கால்களுக்கு
எருக்கலம்பூ சல்லடமாம்.
மண்டியிடும் கால்களுக்கு
மாதுளம்பூ சல்லடமாம்.
தட்டி வரிந்து கட்டி
தாமரைப்பூ சுங்கலிட்டார்.
எடுத்தாரே ஆயுதத்தை
எங்கள் மெச்சும் பெருமாளும்
பாச்சக் கயிறு ஒரு கையிலே
பட்டாவாள் ஒரு கையிலே

## வாக்கு வாதங்கள்

'ஆரடா பயலேயென்று
அதட்டியே கேட்கும் போது,
அந்தசத்தம் காதில் கேட்டார்
அரும்பாவி கள்ள நாட்டார்.
"ஆரடா கேட்கிறவன்

---

1-2. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.

3. வோய் என விளிப்பது நெல்லைமாவட்ட வழக்கு.

அஞ்சாமல் எங்கள் முன்னே.
வடநாட்டு கள்ளரப்பா
வார்த்தை ரெம்ப பேச வேண்
டாம்.''
அந்த வார்த்தை காதில் கேட்
டார்
அழகு மெச்சும் பெருமாளும்
நாய்களைத்தான் அழைத்து
தலமுடனே ஏவலுற்றார்.

## போரில் வெற்றி

ஓடுகின்ற கள்ளர்தானே
ஒருமுகமாய் ஒன்றுகூடி
வந்ததொரு பாண்டியனை
வளைத்தார்கள் கள்ளநாட்டார்.
மெச்சும் பெருமாள் பாண்டி
யர்க்கும்
மோசம் செய்யும் கள்ளருக்கும்
சாமமான சாமத்திலே
சண்டைக்களம் ஆகுதய்யா.
ஆறுபேர் கள்ளர்களை
அருமை பாண்டியரும் கொன்று
விட்டார்.

## தப்பிய திருடன்

அதிலே யொரு கள்ள நாட்டார்
அந்தப் படுகளத்தில் படுத்துக்
கொண்டான்.
எல்லோரும் மாண்டாரென
ஏற்றதொரு பாண்டியனும்
கச்சை கழத்தி[1] வைத்தார்
கண்களையும தான் துடைத்
தார்.
மருத மரம் மூடருகே.
மன்னவரும் சாஞ்சிருந்தார்.[2]
சாஞ்சிருந்த நேரத்திலே
தனிப்பாவி கள்ள நாட்டான்
ஆறுபேர் மாண்டுபோனார்
அரும்பாவி இருக்கலாமா?
சவத்தை உருட்டித் தள்ளிவிட்டு
சண்டாள கள்ளநாட்டான்
உருண்டு உருண்டு வாரானே
உற்றபிள்ளை கள்ள நாட்டான்.

## குத்துப்பட்டார் பாண்டியர்

மருதமர மூடதிலே
மன்னரது குத்துக் கம்பாம்.
குத்துக்கம்பைக் கையிலெடுப்பான்
குடிகெடுத்த கள்ளநாட்டான்.
மன்னனுடைய விலாவதிலே
மாபாவி குத்தி விட்டான்.

## பழி வாங்கல்

குத்தின குத்தை வாங்கிக்
கொண்டு
குத்துக் கம்பைக் கையில் வாங்கி
வாங்கின குத்துக் கம்பால்
வடநாட்டு கள்ளனையும் குத்தி
விட்டான்
கள்ளநாட்டான் மாண்டானே.
கைலாசம் சேர்ந்தானே.
மெச்சும் பெருமாள் பாண்டி
யர்க்கு
மேல்மூச்சு வாங்குதய்யா.
குத்துபட்ட இடத்திலேதான்
குடலு கீழே விழுந்திடுமாம்.
குடல் விழுந்த இடத்திலேதான்
குப்புறத்தான் விழுந்தாரே.

## நன்றிமிக்க நாய்கள்

மன்னனுட படுகளத்தை
மற்ற நாய்களெரண்டும் கண்ட
தய்யா.
குத்து விழுந்ததென்ன
குடல்வீழே சாய்ந்ததென்ன
பாண்டியர் படுகளத்தில்
படுத்துப் புரளுதய்யா.
வீடுகொண்டு சேர்க்கவேண்டும்
விழுந்தகதை சொல்லவேண்டும்.
என்று சொல்லி நாய்கள்
ரெண்டும்
இழுத்ததய்யா மன்னவனை.

---

1. கழத்தி — கழற்றி
2. சாஞ்சி — சாய்ந்து

### அறிவுடைய செயல்கள்

பாளையங்கால் தண்ணியிலே
பாண்டியனைத் தள்ளிவிட்டு
அக்கரையில் ஒரு நாயும்
இக்கரையில் ஒரு நாயும்
பாத்துக்கொண்டு வருகுதய்யா[1]
பாண்டியன் கட்டையத்தான்.
மாதேரு முக்கதிலே
மகாதேவர் அய்யனார் வாசலிலே
மன்னரைக் கரைசேர்த்து
மன்னனது நாய்கள் ரெண்டும்
சாத்தாவின் வாசலிலே
சரீரத்தைப் போட்டுவிட்டு
மாண்டு மடிந்தவரை
மகிமையுடன் காத்திடுமாம்

### சேதி சொன்ன சிறப்பு

துஷ்டன் என்ற நாயதுதான்
துரிதமுடன் வருகுதய்யா.
அக்காமார் வாசலிலே
அழுதுஊளை போட்டிடுமாம்.
நாயுடைய சத்தங்கேட்டு
நலமுடனே தானெழுந்து
மெச்சும் பெருமாள் வந்தா
னென்று
மேன்மையுடன் பெண்கள்
ரெண்டும்,
நாயதற்குச் சாப்பாடு
நாயகியாள் கொண்டுவந்தார்.
வைத்தாளே சாப்பாடு, வாய்
வைக்கவில்லை நாயதுதான்
காலைவந்து கட்டிடுமாம்
கதறிசத்தம் போட்டிடுமாம்.
சத்தம் போட்ட சமயத்திலே
தானறிந்தாள் பெண்கொடியும்.

### தமக்கையரின் தவிப்பு

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுகிறாள் பெண்கொடியும்
நம்முடைய தம்பியரை
நாம் இன்னும் வரக் காணவில்லை.
என்பிறப்பானைக்[2] காணோ
மென்று
ஏங்குதாளே ரெண்டு பேரும்.
எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுதாளே சிந்தையிலே.
என்றவளும் எண்ணும்போது
ஏற்றதொரு நாயதுதான்,
கையைப் பிடித்திடுமாம்
கண்மணியை இழுத்திடுமாம்.
மடிச் சேலை பிடித்திடுமாம்
மங்கையரை இழுத்திடுமாம்
பார்த்தாளே பெண்கொடியாள்
பதறி எழுந்தாளே.

### தம்பியைத் தேடிவரல்

கதவுதன்னைந் தாள்பூட்டி
கட்டழகி பயணம் வைத்தாள்.
நாயதுதான் முன்னாலே
நல்ல பெண் கொடியும்
பின்னாலே.
வெள்ளைப் பிள்ளையார் வாசல்
வழி
வேகமுடன் வாரபோது,
வீமனென்ற நாயதுதான்
விம்மி ஊளைப் போட்டிடுமாம்.
எட்டிஎட்டி வழிநடந்தாள்.
என்பிறவியென்று
துடித்துவராார்.

### கண்டதும் கதறல்

தம்பியுட படுகளத்தைக்
தமக்கையரும் கண்டாரே.
மெச்சும் பெருமாள் தம்பியென்று
மேல்விழுந்து தானழுதாள்.
முத்துபோல் கண்ணீரை-
முகமெல்லாம் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோரவிட்டாள்.
அடித்தாளே தலைமேலே
அறைந்தாளே அடிவயிற்றில்.
குடலோடு தான்புரண்டு
கூக்குரலும் போட்டாளே.

4. கட்டை — உடல்,
5, என்பிறப்பானை — என்னுடன் பிறந்தேனே.

விடியக்காலம் நேரமாச்சே
வெள்ளையது[1] உதயமாச்சே.

### அரண்மனைக்குச் சேதிசொல்லல்

இங்கிருந்தால் மோசமென்று
எழுந்தாளே பெண் கொடியும்.
அரண்மனைக்குச் சேதிசொல்ல
அக்காளும் தங்கையரும்,
வளத்த நாய்கள் காத்திருக்க
வாராரே அரண்மனைக்கு,
அழுதகுரலோசை
அரண்மனைக்கு எட்டிடுமாம்;
மந்திரியை வரவழைத்து
மகாராசா ஏது சொல்வார்.

### வேந்தனது விசாரனை

“ஆசார வாசலிலே இன்று
அழுத ஓசை கேட்குதப்பா.
அழகுபிள்ளை மந்திரியே
அறிந்துகொண்டு வாரு”மென்றார்.
மந்திரியும் வந்தல்லவோ
மங்கையரைக் கண்டாரே.
“பெண்ணே பெண்ணரசே !
பேடை மயிலழகியாரே !
அழுது இங்கு வந்ததென்ன
அருங்கிளியே சொல்லுமென்றார்.”

### வளத்தராக்கியின் வாய்மொழி

வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்திறந்து ஏது சொல்வாள்.
“வாருமய்யா மந்திரியே
வார்த்தையொன்று சொல்லக் கேளும்
என்னுடைய தம்பியர்க்கு
எமன் எங்கிருந்து வந்தானோ.
தீராத துயரமது
தீவினையாய் வந்திருக்கே.
ஆறாத் துயரமது
ஆற்ற முடியலியே.
கண்ணுவலி வேதனையால்
கவலைகொண்டு இருக்கும்போது
இருசால் பணம் பிரித்து
என்பிறப்பான் கொண்டு போனான்.
பணம்செலுத்தி வாரபோது
பாசமுள்ள தம்பீ பட்டுவிட்டான்
மெச்சும் பெருமான் என்பிறப்பான்
மேலுலகம் சென்றானே.
மாதேரு முக்கதிலே
மகாதேவன் வாசலிலே
நாய்கள் ரெண்டும் காத்திருக்கு
நலமான தம்பியரை.
அக்கமில்லை பக்கமில்லை
ஆதரிப்பார் யாருமில்லை.
சந்தனக் குலமரத்தைச்
சாய்த்துவிட்டு வந்தோமய்யா.
குலைவாழைக் கண்போல
குவலயத்தில் சாய்ந்துவிட்டோம்.
என்பிறப்பான் தம்பியரை
எக்காலம் காணப்போறோம்
காணக் கிடைக்காத
கண்மணியைக் காண்பதெப்போ?
குத்தும் விழுந்திருக்கே
குடலும் சரிந்திருக்கே,
அரண்மனைக்குச் சேதி சொல்ல
அவசரமாய் வந்தோமைய்யா.”

### மந்திரியார் மொழிந்தது

மந்திரிதான் காதில் கேட்டு
மகாராசர் முன்னே வந்தார்.
“ராசாவே ராசமன்னா.
ராசமுடி பாண்டியனே.
மெச்சும் பெருமாள் பாண்டியனும்.
மேன்மைபெற்ற பாலகனும்
இறுசால் பணம்பிரித்து
இன்பமுடன் கொண்டல்லவோ
பணம் செலுத்தி வாரபோது
பாலகனும் பட்டுவிட்டான்.
பட்டு விழுந்தானே
பாரமுடி சாய்த்தானே.
குத்து விழுந்திருக்காம்
குடலு சரிந்திருக்காம்.
படுகளத்தைச் சொல்வதற்குப்
பத்தினிகள் வந்திருக்கார்.”

---

1. வெள்ளை — விடியல் வெளுப்பு.

*All Kinds of tyres from Scooter to Tractor tyres are retreaded most scientifically in our modern plant.*

★

**for Quicker and dependable retreading contact :**

**The Anamallais Retreading Corporation**

*42, Mount Road, Guindy, Madras-600032*

Dial : 431157, 431200, 432926